எக்கருமத்தைப் பொறுப்பேற்றாலும் அதை நிறைவுறச்செய்து முடிக்கவேண்டும் என்ற மனப்பாங்கு உடையவர். எத்தகைய இடையூறுகள் வந்தாலும் எடுக்கும் பணியைச் சிறப்பாக, திருப்திகரமாக முடிக்கும் வரையும் ஓய்ந்திருக்கவேமாட்டார். உதாரணமாக ஒரு விடயத்தை இங்கு குறிப்பிடலாம். 2000 ஆண்டு ஆடி மாதம் யாழ்நகர் மக்கள் இடம்பெயர்ந்து குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் சிதறி வாழ்ந்த காலம்; எமது கல்லூரி மானிப்பாயில் இயங்கி வந்த காலம். அக்காலத்தில் தான் எமது கல்லூரியின் 150வது ஆண்டு (1859-2000) நிறைவு விழா கொண்டாடப்பட்டது. ஞாபகார்த்த முத்திரையும் வெளியிடப்பட்டது. அன்று 21.07.2000 காலை யாழ்ப்பாணத்தை விட்டு புறப்பட்டதற்குப்பின் அப்போதுதான் கல்லூரியில் காலடி எடுத்து வைக்கின்றோம். கல்லூரியை நாம் அடைந்தபோது அங்கு கண்ட காட்சியால் பிரமித்தே போனோம். கல்லூரி வாயில் மத்தியூஸ் மண்டபத்திற்கு போகும் வழி, மத்தியூஸ் மண்டபம் யாவும் வெகு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆபத்தான காலம்; பொருட்கள் தட்டுப்பாடான காலம்; வேலைக்கு ஆட்கள் பிடிப்பது மிகவும் கஷ்டம். இப்படிப் பட்ட நிலையில் எப்படி இவ்வளவு ஏற்பாடுகளும் செய்யப்பட்டன? விழாவோ மிகவும் சிறப்பாக திருப்திகரமாக நிறைவேறியது. இவ்வளவு ஆயத்தங்களுக்கும் பொறுப்பாக இருந்தவர் எமது அதிபர் அவர்களே! சிதறிக் கிடந்த மாணவர்களை ஒன்று திரட்டி நூற்றாண்டு விழாவை யாவரும் பாராட்டும் படியாக நடத்திக்காட்டினார் பொறுப்பெடுத்தால் நடத்தியே முடிப்பவர் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.



காலத்தை கடத்துவது, எக்கருமத்தையும் பின்போடுவது என்பது இவருக்கு முற்றாகவே பிடிக்காத ஒரு விடயம் எக்கருமமாக இருந்தாலும் அதை உரிய

காலத்திற்கு பிந்தாமல் செய்து முடிக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார். கஷ்டமான விடயங்களில் தானும் கூடவேயிருந்து கருமங்களை முடிப்பதில் உதவி செய்வார். அவருடன் செயலாற்றுவதில் பல விடயங்களை அறிந்து கொள்ளவும் அனுபவப்படவும் கூடியதாக இருப்பது ஒரு அனுகூலமான விடயம்தான்.

**கண்டிப்பும் கனிவும்**

உதவி அதிபராக இருந்து கல்வி கற்பித்த காலங்களில் மாணவர்கள் மட்டில் மிகவும் அக்கறையோடு நடந்து கொண்டார். அவர்களது ஒழுக்கம், ஒழுங்கு கட்டுப்பாடு போன்ற விடயங்களில் எப்போதும் எவ்விடத்திலும் மிகவும் அவதானமாகவே இருப்பார். அவர்கள் மட்டில் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்ளுவார். எவ்வளவுதான் கண்டித்தாலும் தண்டித்தாலும் மாணவர்களுக்கு அவர் மட்டில் மதிப்பும் மரியாதையும் அன்பும் நிறையவே உண்டு என்பதை அவர்கள் அவரோடு பழகும் தன்மையிலிருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது. மாணவர்கள் அவருடைய அழைப்புக்குக் காத்திருப்பது போல அவருடைய காலடியிலேயே நிற்பார்கள். அப்படிப்பட்ட உறவு மாணவர்களுக்கும் அதிபருக்கும் இடையே உள்ளது என்பதை நினைக்கும்போது அது எம்மை சந்தோசப்படவே வைக்கின்றது.

**ஆசிரியரின் ஆசிரியன்**

ஆசிரியர்கள் மட்டிலும் அவர் கொண்டுள்ள அக்கறையை அவரது செயற்பாடுகள் மூலம் காணக்கூடியதாக உள்ளது. ஆசிரியப் பணியில் அவர்களது முன்னேற்றம் உயர்ச்சி மட்டில் ஊக்கம் கொடுப்பது மட்டுமல்லாது அதன் மட்டில் உள்ள தடைகள் தேக்கங்கள் முதலியவற்றில் கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவதை ஆசிரியர்கள் நன்றாகவே அறிவார்கள். அவ்விதம் அதிபர் ஆசிரியர்களிடையே உள்ள புரிந்துணர்வு பாராட்டப்படகூடியதாக உள்ளது.

கல்வித்துறையில் மட்டுமல்ல விளையாட்டுத்துறையிலும் அவர் கொண்டுள்ள ஆர்வமும் அக்கறையும் அவர் எடுத்துவரும் முன்னேற்றகரமான ஏற்பாடுகளிலிருந்து அறியக் கூடியதாகவுள்ளது. மாணவரிடம் இயற்கையாகவே காணப்படும் ஆற்றல்களை வெளிக்கொணரவேண்டும் எனப் பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுப்பதோடு, அவர்களுடைய சாதனைகளில் அவர்களைப் பாராட்டியும், உற்சாகப்படுத்தியும், ஊக்குவித்தும் வருகின்றார். விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான வளங்களைக் கொடுப்பதோடு பல வழிகளிலும் பெற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.


**கல்லூரி பெற்றபேறு இவர்!**

இத்தகைய கடமையையே கண்ணாக் கொண்டஒருவரை அதிபராகக்கொண்டிருப்பது எமது கல்லூரி செய்த பாக்கியம் என்றே சொல்லவேண்டும். இவரது தூய்மையான பணி மேலும் சிறப்புற மனமார ஆசீப்போம். கல்லூரியினது உயர்ச்சியில், முன்னேற்றத்தில் ஆசிரியர்களும், மாணவர்களும் இவருக்குத் தோள் கொடுத்து உதவுவதோடு இவரது பணிக்குருத்துவ வாழ்வில் இவர் இறைவனுக்கு உகந்த குருவாக ஒளி வீசவும் ஏனைய குருக்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக.

**திரு. பெர்னாண்டோ**
**இளைப்பாறிய ஆசிரியர்**

பிறரை அன்பு செய்யும் பண்பினை வளர்க்கும் கல்வி, பிறருக்காகப் பணிபுரிய வேண்டும் என்னும் மனநிலையை வளர்க்கும் கல்வி!

# புதிய கனவுகளுடன்... பழைய நினைவுகள்



# குருவாகி வெள்ளிகண்டீர்

வானுயர்ந் தோங்கிநிற்கும்
வளமுடைக் காவலூரில்
தேனுடைக் கனிகளோடு
தென்றலும் தேடிவரும்
பூ விறைத்தாடுகின்ற
புனித செபஸ்தியார் பங்கில்
தானிறைந் தாளுகின்ற
திருமிகு கரம்பொனூரில்

ஆண்டது ஐம்பத்தெட்டில்
பூண்டநல் மனுவேற்பிள்ளை இராசம்மா
தம்பதி மகனாய் மண்தனில் அவதரித்தார்
கல்லூரிக் கல்விதனைக் களங்கமின்றிக்கற்று
கலைமாணி வாகைசூடி
வந்துதித்தான் கதிரவன்போல்

துறவறமேற்றுமே
தூய்மையின் குருமாணவனாய்
எண்பத்தி ஐந்தில் ஏற்றமாய் குருவானீர்
துயரங்கள் துடைத்திட
பங்குகள் பலசென்று
ஆற்றி நல் ஆறுதலாய்
தேறுதல் பல செய்து
மேய்ப்புப் பணிக்கென ஆண்டவர் வழியில்
சிறந்த நன்மாணவரை ஆக்கிட சித்தம்
கொண்டீர்

அலைவனம் சூழ்ந்துநின்று ஆர்ப்பரித்தாடி
சாதனைகள் சேரவைக்கும்
பத்திரிசியா பள்ளிதனில்
மலையென மாண்பு கொண்ட
மனநிறைந் தேத்துகின்ற
நிலையினர் பணியாற்றும்
நீள்புகழ் பள்ளியிலே
எண்பத்தியொன்பதில்
எடுத்தடி கால் பதித்திருந்தீர்

தெள்ளிய மேகமாக
திரண்டிடும் இனிய உள்ளம்
துள்ளியே சுற்றியோடி
சோலையிலாடி நித்தம்
செல்லமாய்க் கண்டித்து
வெல்லமாய் இன்சொல் கூறி
சீரோங்கி புகழ்மேலோங்கி
நீரோங்கி பேரோங்கி
சம்பத்தரிசிய கொடியோங்கி
ஆற்றிய பணிகள் அளவிடற்பாலதன்றோ

இன்று குவலயத்தில்
குருவாகி வெள்ளி கண்டீர்
வெள்ளி பொன்னாக வேண்டும்
பொன் வைரமாக வேண்டும்
வைரம் பவளமாக வேண்டும்
பவளம் அமுதமாக வேண்டும்
அமுதம் ஒரு சதாப்தமாக வேண்டும்
முந்தியோர் பெற்றபேறு முழுவதும்
உம்மைச் சேரவேண்டும்
செந்தமிழ் மொழியெடுத்து
மலர் தூவி வாழ்துகின்றோம்
வாழிய தந்தையே வாழிய முதல்வரே
பல்லாண்டு பல்லாண்டு வாழிய வாழியவே!

சுபம்

**கவியாக்கம் : வை.க.ரவீகரன்**
**ஆசிரியர்**

**குளத்தில் சிறுகல்லை எறிந்தால் பிறக்கும் சிறு அலையானது**
**பெரிதாக மாறி மாறி கரையைச் சேரும்**

# M. Jero Means

Manipulator : - He is a good Manipulator

Jocund : - He is very Jocund

Enriched : - Enriched with lovable qualities

Respect : - Respects everybody

Orator : - He is a good Orator

An erudite Scholar, with scholarship resting so lightly and gracefully on his Shoulders, a sincere and cordial friend ever eager to seize hold of opportunities of rendering invaluable help to others as a matter of sheer delight and joy. One always forward, A true and perfect Christian in the broadest and noblest sense of the term, a counselor to whom one could always turn for unfailing guidance and help. May the Lord **GOD ALMIGHTY** Shower on you his choicest blessings, bestowing ever increasing health, wealth and prosperity so as to enable you to be blessed not only with Grace but also with the various other crowing achievements.

***MAY THE LORD ALMIGHTY SHOWER ON YOU HIS HEAVENLY BLESSINGS THROUGHOUT YOUR MINISTRY.***

*S.JOHNSON SANJEEVRAJ*

*HEAD PREFECT - 2010*

**"To Possess God We Must Allow Him to Possess Our Soul"**

# நம் கல்லூரி கண்ட அரும் பணியாளன்

"நீ இவர்களை விட என் மீது அன்பு செலுத்துகிறாயா?" 'ஆம் ஆண்டவரே எனக்கு உம்மிடம் அன்பு உண்டென உமக்குத் தெரியுமே!' "என் ஆடுகளை மேய்" (யோ. 21:16)



நம் அன்னையாம் திருச்சபை அருளிய "குருக்களின் ஆண்டு' தனிலே தன் இறைபணிக் குருத்துவ அர்ப்பண வாழ்வில் வெண்பொன் விழா வினை எம் அதிபர் அவர்கள் காண்கிறார் என்பது எமக்கு மிக மகிழ்ச்சியையும், எம் கல்லூரிக்குப் பெருமையையும் சேர்க்கும் நிகழ்வாகும்.

'தலைவர்கள் பிறப்பதில்லை உருவாக் கப்படுகிறார்கள்' எனும் கூற்றிற்கேற்ப எமது அதிபரவர்களையும் கல்விச் சமூகத்தின் சிறந்த தலைவராக உருவாக்குவதில் இவரது பெற்றாரும், சகோதரரும், இவரின் தாயின் சகோதரரும் திரு மலை-மட்டுநகர் முன்னாள் ஆயருமான அதி. வந். L.R.அன்ரனி ஆண்டகையவர்களும் முதற்கண் நோக்கத்தக்கோராவர். அடுத்த நிலை யில் கரம்பன் புனித செபஸ்தியார் ஆரம்ப பாடசாலையும், காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியும், எமது கல்லூரியும், குருத்துவக்கல் லூரிகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், கண்டி தேசிய குருமடமும் இவரது உருவாக் கத்தில் முக்கிய பங்கினை வகித்துள்ளன.

யாழ் குடாவின் வடமுனையில் ஒரு புறம் நெய்தலும், மறுபுறம் மருதமும் கொஞ்சிக் குலாவும் இயற்கை வளம் நிறைந்த பழம் பெரும் பதியாம் கைநிறைந்த பொன்னூராம் 'கரம்பொன்', இறையழைப்பின் விளைநிலமாய் விளங்குகிறது. அம்மண்ணின் குருமணியாய் 1958.01.25ல் மலர்ந் தவரே எம் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய அதிபர் தந்தை அருட்திரு. ஜெறோ செல்வநாயகம் அவர்கள்.

1980 - 1982ற்கு இடைப்பட்ட காலத்தில் யாழ் பல்கலைக்கழகத்தில் எமக்கு சிரேஷ்ட மாணவராக அதுவும் ஒரு அருட்சகோதரராக இவரை, இவரது தலைமைத்துவப் பண்புகளை நான் அறியும் வாய்ப்புக் கிட்டியது. அப்போது திருக்களப்பயணங்களை சீராக ஒழுங்கமைத்து பல்கலைக்கழக கிறிஸ்தவ கத்தோலிக்க மாண வர்களைச் சிறப்பாக ஈடுபடுத்துவார். விஞ்ஞான, வர்த்தக, கலைப்பாடங்களை இணைத்துத் தம்பட் டப்படிப்பினை நிறைவு செய்தமை இன்று இத்து றைகளைக் கல்லூரியில் சிறப்புடன் செயற் படுத்த இறைவன் இவருக்கு அருளிய சிறப்பான ஆசீர் என்றே கருதமுடிகிறது.

தமிழ் பேசும் சமூகம் பல இழப்புக்களைச் சந்தித்து பெரும் மனக்குமுறல்களுடன், பல இரத்தக் களரிகளோடும், புலப்பெயர்வுகளுக் கூடாகவும் சென்ற காலமே இவர் எமது கல்லூரி யில் ஆசிரியப் பணிக்காகத் தடம்பதித்த கால மாகும்.

இவர் உப அதிபராகப் 10 வருடங்களும், அதிபராக 03 வருடங்களும் தனது அளப்பரிய சேவைகளை இன்றுவரை கல்லூரிக்கு ஆற்றி வருகின்றார். எம் இனத்தவர்கள் சற்றே அமைதிக் காற்றினைச் சுவாசிக்கக் கிடைத்திருக்கும் இப் புதிய சூழலில் எம் அதிபரவர்கள் பல சவால்கள் மத்தியில் தமது கல்வி நிர்வாகப்பணிகளை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்றார்.

21ம் நூற்றாண்டின் நவீன உலகில் விஞ்ஞான, அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் மாணவர்களை இசைவுபடுத்தி, எதிர்கால சமூகத்தலைவர்களை உருவாக்கும் சீரிய கல்விப் பணிக்குத் தலைமைதாங்கி, அதற்கு இட்டுச் செல்லும் தேடல் களில் முனைப்புடன் செயற்பட்டுவருபவர் எம் அதிபர் என்று கூறினால் அது மிகையாகாது.

கல்லூரி வளாகத்தில் பணியாற்றும் ஆசிரியர்களானாலும் சரி, அலுவலகப் பணி யாளர்களானாலும் சரி, மாணவர்களானாலும் சரி,

அவர்களின் வாழ்வியல் தொடர்பான தெளிவு களையும் மனிதாபிமான முறையிலான செயற்பாடு களையும் முன்னெடுத்துச் செயற்பட்டு வருபவர். இந்தவகையில் இளையோருடனான இவரது தொடர்புகள், உறவுகள் மிகவும் சுமூகமானவை. கல்லூரி நேரத்துக்கு அப்பால் இவர் இதற்கமைய செயற்படுவதை நாங்கள் அவதானிக்கின்றோம். மாணவரின் சூழல், பின்னணிகளை நன்கு புரிந்து கொண்டு, அவர்களின் உணர்வுகளை மதித்து நட்புடன் பழகுவார். கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டிப்பார். இன்றைய புதிய கல்வி முறைகளின் திறந்த அமைப்பினை மாணவர்கள் நன்கு பயன் படுத்தி எதிர்காலத்திற்குத் தயாராக வேண்டும் என்பதே இவரின் எதிர்பார்ப்பு ஆகும்.

பல்வேறு அனுமானங்ளுக்கு மத்தியிலும் தமிழ் உணர்வுடன் நாம் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். அதற்கு எம் கல்லூரி விருது வாக்கிற்கு அமைய விசுவாசமும் இறைப்பற்றும் கடின உழைப்பும் தேவை என்பதை தமது உரைகள் நற்சிந்தனைகள் மூலம் எமக்கு ஊட்டி வருபவர் எம் அதிபர். மாணவரை ஆசிரியர்கள் சரியாக இனங்கண்டு அவ்வத்துறைகளில் அவர்கள் வளர உதவவேண்டும். மாணவர்தாமாகவே செயற்பட நாம் உதவ வேண்டும் என்பதே அவரது அவா. இறையரசுப்பணியை பல இடையூறுகள் சவால் கள் மத்தியில் சளைக்காமல் முன்னெடுத்துச் செல்கின்றார். இதற்காகப் பல மேடு பள்ளங்களை, கரடுமுரடான பாதைகளை இவர் கடந்து செல்ல நேர்ந்திருக்கிறது.

கல்விப் புலத்தில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்கள், சீர்திருத்தங்கள், அணுகுமுறைகள், நவீன துரிதவளர்ச்சி ஆகியவற்றிற்கு ஈடு கொடுக் கக் கூடியவகையில் ஓர் ஆசிரியன் தன்னை மாற்றிக்கொண்டு, புதியவற்றை உள்வாங்க வேண்டும்; 'மீள்குடியேற்றம், புனர்வாழ்வு என்று யுத்தத்தினாலும் வன்முறைக் கலாசாரத்தினாலும் சிதைவடைந்து போயுள்ள எமது பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவோம்' என்ற பெயரில் பல நிறுவனங்கள் முண்டியடித்துக்கொண்டு பல செயற்திட்டங்களை முன்னெடுக்கும் இன்றைய காலத்தில், எமது மாணவர்கள் இவற்றைப் பார்க்க வேண்டும் அறியவேண்டும், ஆனால் அதற்குள்ளே முழுவதும் மூழ்கித் தம் கல்வியை இழந்து விடக் கூடாது என்பதை அடிக்கடி ஞாபகப்படுத்தி, புத் துணர்வூட்டி விழிப்படையச் செய்பவர் எம் அதிபர்.

நாமும் எமது கல்லூரியும் எமது செயற்பாடுகளும் மற்றவர்களுக்கு ஒரு மாதிரிகை (Model) ஆக விளங்கவேண்டும் என்று ஆசிரியர்களின் ஒன்று கூடல்களின் போது கூறி எமக்கு ஊக்கமூட்டுவார்.

எமது கல்லூரி தனித்துவமானது அத்தனித் துவத்தைப்பேணுவது கல்லூரியிலுள்ள எம் ஒவ்வொரு வரினதும் பொறுப்பு என்பதை உணர்ந்திடுவார். இவ்வாறு எமக்கு ஓர் நல்ல வழிகாட்டியாவார் எம் அதிபர்.

இறைபணிக் குருத்துவத்தில் தன்னை 25ஆண்டுகள் ஈடுபடுத்திக் கொண்டதுபோலவே இவர் தம் கல்வி நிர்வாகப் பணியிலும் சிறப்பாகச் செயற்படுவதற்கு இவரிடம் காணப்படும் சிறப்பான இலட்சணங்களை இங்கு குறிப்பிடாமல் விடலா காது. பரந்த நோக்கு, செயற்றிறன், விடாமுயற்சி, பலதுறை சார்ந்த கட்டுப்பாடான வாழ்க்கை, கடமையில் கண்ணியம், மனிதாபிமானம், உயர்ந்த இலட்சியநோக்கு இவையே இவரை 'நம் கல்லூரி கண்ட ஓர் அரும் இறைபணியாளன்' என்ற நிலைககு உயர்த்திற்று.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் எம் அன்புக்குரிய அதிபரவர்கள் காணும்கனவுகள், தீட்டும் திட்டங்கள் இன்னுமதிகம். கல்லூரியின் வளர்ச் சியே இவரது இலட்சியம் என்று கூறினால் மிகையாகாது. இவரது இலட்சியக் கனவுகள் நனவாகிட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இவர் தன்குருத்துவ அர்ப்பணவாழ்வின் வெண் பொன்விழாக்காணும் இந்நன்நாளில் அவரை வாழ்த்தி, இதுவரை காலமும் இவராற்றிய இறைபணிக்கூடான கல்விப் பணிகளுக்காக இவரைப்பாராட்டி தொடர்ந்தும் இப்பணிகளில் இவர் சிறப்படையவும் பொன் விழா, வைரவிழா, பவளவிழா, நூற்றாண்டு விழாக்களைக் காணவும் இறையாசீர் வேண்டுகின்றோம்.

**திருமதி மே. ம. ஜோண் அரியதாஸ்**
**(மல்லிகா)**
**ஆசிரியை**

# A Man of Good Will

"Whoever is faithful in a very little is faithful also in much". Lk.16:10

Life is a journey. In this journey we meet so many people. But a very few we remember and admire. On this basis I admire the Rector of St. Patrick's College, Rev. Fr. Jero Selvanayagam, for his faithful and devoted services to this College.

It is with a deep sense of Joy and admiration I write a few words of appreciation to this special Souvenir bulletin which is to be published on the occasion of the sacerdotal Silver Jubilee of Rev. Fr. Jero Selvanayagam.

As a member of St. Patrick's College and as the Superior of Lourdes Convent, I write this with gratitude to him for his dedicated and untiring services to the school and to the society. It is with pleasure I say that both of us joined the school on the same year. Twenty-one long years had passed. So it's appropriate that I should pen a few words about him and his services.

I can sincerely say that he is a man of Good Will. Whatever the work he does, small or great he does it perfectly and with good will. He has great love for the Alma Mater. After he assumed the duty as the Rector in 2008, St. Patrick's College has been developed and grown in many ways.

There have been tremendous and remarkable achievements in every sphere in the field of Education. The cause of these achievements and improvements in the studies and extra-curricular activities is due to the genuine, devoted and untiring efforts of his services. I admire the zeal and enthusiasm he has for the uplift of the school. His one and only desire is to build up the school in every possible way. Even when he was a Vice-Rector, he worked with dedication and with good will.

A very remarkable quality I see in him is perfection. He wants everybody and everything to be perfect. He carries out everything in a perfect manner. His concern is about the spiritual life of the students too. He insisted that the teachers should use the Bible or any other spiritual books when we give advice to the students on Wednesdays. To encourage the students to respect and honour the teachers he inaugrated wishing the teachers on their Birthdays in common Assembly, reading a poem written by the prefects to their dedicated services to the College. This is appreciated by all.

He inculcates in the minds of the students the need for social consciousness that is imperative to have a heart for needy and the unfortunate ones in the society. What he preaches to others he practices. When the war in Vanny broke out in 2009, when the people were allowed to go to their respective places many parents approached him seeking admission to their children in the college. He accepted their requests and admitted many students in the College. He didn't stop with that; he sought help from the old boys and well wishers for the expenses of their studies and for their other needs. His loving kindness towards the poor and marginalized is shown here.

He is always conscious of the personality and the skills of the teachers. Mostly in all the staff meetings he insists that the teacher should always train himself / herself to face the modern world and its challenges and be well equipped. The teacher should be a good example to the students. He is very conscious about the studies of the students and their welfare. He trains and directs the students of the College in such a way that they can adjust themselves to any situation.

Computer literacy is the basic requisite for building a knowledgeable society, capable to meet the challenges posed by modern society. It empowers the individuals to face the challenges with confidence. So he encourages the students and staff to keep in touch with these modern technologies. He even started computer classes for students. He encourages and allowed the teachers to participate in the computer seminars. He appointed competent Teachers to teach computer in the school.

For the first time the Philatelic Club has been inaugurated by him in our College. His motive is to inculcate in the minds of the students to use their leisure time in a meaningful way and by collecting stamps the students may get more knowledge. He too is a lover of stamp collecting.

Besides the student's academic orientation he takes pain in developing the students' capabilities through sports, indoors and outdoor games. With the guidance and effective leadership of our dear Rector I could say the College has developed with more resources and facilities. During his period of service the College strives to maintain its earlier atmosphere. The College maintains the English standard and fame and thrives to go forward with untiring efforts of this Rector.

In spite of all these heavy task I would say he enjoys life. Though he seems to be stern and strict in school hours, outside of the school hours he enjoys with the staff. I would like to mention an incident. Once he took the staff for a tour to the upcountry. He made himself one among them. He is the one who sang and danced most, to make the staff happy.

Finally I take this opportunity to wish him success in all his career. May the Good Lord bless his Silver years, and the following years to come. I wish you a very happy Jubilee Dear Father. May God bless you.

**Sr. Joyce Marie A.C.**
**Staff-member,SPC**
**and Superior**
**Lourdes Convent, Jaffna**

**"How Beautiful on the Mountain are the feet of the man who brings the tidings of peace, joy and salvation."**

# கல்லூரிக்காகவே வாழ்பவர்

பண்பாளர்களை உருவாக்குவதில் நீண்ட காலப் பாரம்பரியம் கொண்ட யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் வளர்ச்சியில் நீண்ட காலமாக தன்னை அர்ப்பணித்துச் சிறப்பாகப் பணியாற்றி வரும் எமது கல்லூரி அதிபர், வண. பிதா ம. ஜெறோ செல்வநாயகம அடிகளாரின் பணிக்குருத்துவத்தின் வெண் பொன் விழாவில் அவரை வாழ்த்துவதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

**ஆசிரியர் - விடுதிக்காப்பாளராய் அறிமுகம்**

1975/76 களில் புனித பத்திரிசியார் கல்லூரியில் கட்டைக்காற்சட்டை அணிந்து அமைதியான ஒரு குருமட மாணவனாக நான் கண்ட சிரேஷ்ட மாணவர் ஒருவர், அழகிய இளம் குருவாக 1989ஆம் ஆண்டு எமது பாடசாலையில் பணியாற்ற வந்த போது அவரா இவர்? என நான் வியப்படைந தேன். கல்லூரியில் ஆசிரியராக அதே சமயம் விடுதிக்காப்பாளராகப் பணியை ஆரம்பித்த இவர், அப்போதைய அதிபர் வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் அவர்கள் விடுதியை "Home of Love" என வழங்கியிருந்ததற்கேற்ப விடுதியை ஓர் அன்பு இல்லமாகவே இயக்கி வந்தார். விடுதி மாணவர்களை தமது அன்பால், அரவணைப்பால், புத்திமதிகளால், மற்றும் வெளிக்களச் செயற்பாட்டினால் நல்வழிப் படுத்தியிருந்தார். இவர் விடுதிக்காப்பளராக இருந்தபோது முழுக்கவனமும் விடுதியின் மேல்தான் இருக்கும். விடுதியை விட்டு வெளியே செல்வது மிகமிகக் குறைவு. இவர் ஒரு சிறந்த நாடக இயக்குனர் என்பதை முழுக்கமுழுக்க விடுதி மாணவர்களால் நடிக்கப்பெற்று விடுதிச்சாலைத் தினங்களில் மேடையேற்றப்பட்ட ஆங்கில நாடகங்களான "Murder in the Cathedral" மற்றும் "Childs Play" போன்றவற்றின் தரத்தில் இருந்து நான் புரிந்துகொண்டேன். அவரது காலத்தில் உபகாப்பாளராகக் கடமை யாற்றிய ஆசிரியர் திரு சி. ஸ்ரனிஸ்லோஸ் அவர்கள் இவரைப்பற்றி குறிப்பிடும்போது "மாணவரின் நலனில் அக்கறை கொண்டு எப்போதும் பாடசாலை பற்றியே சிந்திக்கும் மற்றும் மாணவரை அன்பாக அரவ ணைப்புடன் அதே சமயம் கண்டிப்புடனும் வழிநடத்தும் ஒருவராக திகழ்ந்தார்" எனக்கூறினார்.

**கனிஷ்ட- சிரேஷ்ட இடைநிலை - உயர்தர பிரிவு பொறுப்பாளர்**

அதிபர் அவர்கள் கனிஷ்ட இடை நிலை மற்றும் சிரேஷ்ட இடைநிலைப் பிரிவிற்குத் தலைமை ஆசிரியராகக் கடமை யாற்றியபொழுது மாணவர்களின் நலன் பேணுவதில் அதிக சிரத்தை கொண்டவ ராகக் காணப்பட்டார். மாணவர்களின் கஷ்ட துன்பங்களை கேட்டறிந்து, பலருக்குத் தன்னாலான பல உதவிகளைச் செய்துள் ளார். பல வகுப்பகளுக்கு ஆங்கில பாடத் தை மாணவர்கள் விரும்பக்கூடியவாறும் கற்பித்து வந்தார். 'வகுப்பறையில் மகிழ்ச்சி கரமான கற்றல் - கற்பித்தல் முறைகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்' என்பது இவரது கொள்கையாகும்.

**உப அதிபர்**

1998ல் உபஅதிபராக அதே சமயம் கல்லூரிமட்டத் தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றிய பொழுது, உயர்தரக்கல்வி பயிலும் மாணவர்கள் வளர்ந்தவர்கள்; மதிக்கப்பட வேண்டியவர்கள்; அவர்கள் தாமாக உணர்ந்து செயற்படவேண்டும்; என்ற வகையில் அவர்கள் வழிநடத்தப்பட வேண்டும் என்ற நோக்கம் கொண்டவராக காணப்பட்டார். இக்காலத்தில் விளையாட் டுத்துறையிலும் தனது கவனத்தை, அக்கறையைச் செலுத்தத் தொடங்கி யிருந்தார். விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தல், விளையாட்டு உபகர ணங்களை வாங்கிக் கொடுத்தல், ஒவ்வொரு விளையாட்டுக்களைப் பற்றியும் அவர்க ளிடமே கேட்டுத்தெரிந்து கொள்ளுதல்,

அவர்களின் கல்வியில் பிரத்தியேக அக்கறை செலுத்துதல் போன்ற செயற் பாடுகளையும் மேற்கொண்டிருந்தார். கல்லூரி விழாக்களின்போது பொறுப்புக் களைத் தன்மேல் எடுத்து அவற்றைக் கச்சித மாக நடத்தி முடிப்பார்.

**விளையாட்டுத்துறைத் தலைவர்**

2003ம் ஆண்டில் வண பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் அதிபராகப் பதவியேற்ற காலத்தில் ‘கல்லூரி விளையாட்டு அவைக்கு’ தலைவராகவும் கடமையாற்றினார். விளை யாட்டுத்துறையில் கல்லூரி முன்னணி வகிக்கவேண்டும் என்பதற்காக அவர் காட்டும் ஆர்வம் அபரிமிதமானது. அன்றி லிருந்தும் மற்றும் 2008ஆம் ஆண்டு எமது கல்லூரிக்கு அதிபராகப் பதவியேற்று இன்று வரையும் விளையாட்டுத்தறையில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் பல. இச் சாத னைகள் கீழே பின்னணியில் குறிப்படப்பட் டுள்ளன.

**அதிபர்**

அருட்தந்தை அவர்கள் அதிபராகப் பதவியேற்ற பின்னர் அவரது பொறுப்புக்கள் அதிகரித்தன. எனினும் பலத்த வேலைப் பழுவின் மத்தியிலும் பாடசாலை சார்ந்த எந்த ஒரு செயற்பாட்டிலும் ஈடுபடுவதுடன் அந்தச் செயற்பாடு முடியும்வரை கருமமே கண்ணாக இருப்பார். அதிபராக அலுவலகத்தில் மட்டுமன்றி, களத்தில் ஆசிரியரோடு ஆசிரியராக மாணவரோடு மாணவராக விளையாட்டு வீரர்களோடு வீரராக பணியாளர்களோடு பணியாளராக நிற்பார்.

**கல்வி வளர்ச்சியில் அதிக ஆர்வம்**

பாடசாலை சார்ந்த பல்வேறு செயற் பாடுகளை முன்னெடுத்தாலும், கல்வியின் அவசியத்தையும் அதன் பெறுபேறுகளையும் அதிகம் வலியுறுத்துவார். அதனால் சராசரி மாணவர்களை அதிகம் உள்வாங்கும் எம் பாடசாலையின் பெறுபேறு அடைவுமட்டம் குறிப்பிடக்கூடிய வளர்ச்சியைக் கொண்டுள்ளது.

**இசை ஆர்வலா**

இவர் ஒரு இசைப்பிரியன். நல்ல குரல் வளம் உடையவர். ஆங்கிலப் பாடல் களை இராகலயத்தடன் பாடுவார். 2002ம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண ரீதியில் நடாத்தப்பட்ட ஆங்கில தினப்போட்டியில் கல்லூரி சிரேஷ்ட மாணவர் பாடகர்குழு முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது இவரது திறமைக்குச் சான்று.

இவ்வாறு பல திறமைகளை கொண்ட ஒருவர் எமது பாடசாலைக்கு அதிபராக இருப்பது எமது கல்லூரி செய்த பாக்கியமாகும். அதுவும் எப்போதும் கல்லூரியையே தன் வீடாக எண்ணி வாழ்பவர் எம் அதிபர். இவர் நற்சுகத்தடன் நீண்ட காலம் வாழ இந்த வெள்ளி விழாவில் வாழ்த்துவோம்.

**சி.சகாயராஜா**
**விளையாட்டுத்துறை பொறுப்பாளர்**

**“எப்படி நீ ஏழைகளைப் பார்க்கிறாயோ அப்படியே நீ கடவுளைப் பார்க்கிறாய்”**

# FR. JERO AS VICE - RECTOR & RECTOR

## Some achievements in sports

### CRICKET

- JSCA Champions:- under 12 & 15 in 2003;
  under 12 &16 in 2004;
  under 13 &15 in 2005;
  under 15 &17 in 2007;
  under 17 in 2008 & 2009.
- Under 17 All Island DIV. IV CHAMPIONS in 2005 (Astra Cup)
- Best Team of the North – under19 in 2009.
- Under 19 Cricket Team Promoted to Div.ii in 2010.

### SOCCER

- All Island MILO CUP: under 19 Div.III Soccer Champions in 2003.
- All Island MILO CUP under 19 Div. II Soccer Champions in 2004.
- Promoted to Div. I in 2005 for the above Tournament.
- Under 18 Divisional and Zonal Champions in 2003, 2005, 2007 & 2008.
- Under 19 Provincial Champions in 2003.
- Under 16 Divisional Champions in 2003 & 2005.
- Under 16 Divisional Champions in 2005.
- Under 13 Zonal Champions of FFSL in 2007.
- Under 19 District Champions in 2005, 2008 & 2009.
- Under 19 Zonal Champions in 2009.

### TENNIS

- Under 19, Zonal & District Champions in 2009.

### CARROM

Under 15, Divisional, Zonal, District & Provincial Champions in 2009.
Under 15 Divizional, Zonal & District Champions in 2010.
Under 19 Provincial Champion in 2010.

### ATHLETICS

| | | Gold Medal | Silver Medal |
|---|---|---|---|
| Provincial Meet | 2008 | 06 | 03 |
| | 2009 | 09 | 07 |
| | 2010 | 05 | 03 |

# புன் சிரிப்புடன் வரும் கோபம்



அன்பின் ஊற்று நீர்
இறை பக்தியின் மேலோன் நீர்
கண்ணின் மணியாய்
மகிழ்வின் நிறைவாய்
இரக்கத்தின் இருப்பிடமாய்
உதவும் கரமாய் – வாழும்
கல்லூரியின் நாயகனே! - உம்
புன் சிரிப்புடன் வரும்கோபம் - எம்மை
வியக்க வைக்கிறது!
சிறுவயதில் குருமடம் புகுந்து
பல்கலை கற்று குருப்பட்டம் பெற்றவரே!
எம் கல்லூரியின் 160வது அகவையில் - உம்
குருப்பட்ட யூபிலியை நிறைவு செய்யும் நாயகனே
உம் பணி வாழ்வு சிறக்க வாழ்த்துகிறேன்.

**டோ. டெனிஸ்**
**தரம் - 9D**

# சுமைகளை சுகங்களாக்குவாய்

இளமைக் காலம் தொடக்கம் இறைவனில் அன்புகொண்டு
இறைவனுக்காய் தம்மை அர்ப்பணிக்கத் துணிந்தவரே
பாடசாலைக்காலம் முதலே பல்துறைகளிலும் சிறந்தோங்கி
பார்போற்ற வாழ்ந்தவரே எம் தந்தையே!



தேசியக் குருத்துவக் கல்லூரியிலே
குருத்துவக்கல்வியை மேற்கொண்டு
சுமைகளை சுகங்களாக மாற்றி
சோம்பெலென சோர்ந்து விடாமல்
இறைபணிபுரிய விரைந்தவரே எம்தந்தையே!

குருத்துவ வாழ்வில் 21ஆண்டுகள்
பத்திரிசிய குடும்பத்திலே சிறப்புடன் வாழ்ந்தவரே
கல்லூரியின் வளர்ச்சியிலே
அயராது கருத்துடனே செயற்பட்டு
புகழ் பல சேர்த்தவரே எம்அன்புத்தந்தையே!

குருத்துவ வாழ்வினிலே வெள்ளிவிழாக் காணும்
எம்பாசத்தந்தையே உம்பணி இப்புவிதனில்
என்றும் தொடர வாழ்த்துகள் பலகூறி
இறையாசீர் வேண்டிநிற்கின்றோம்!

**கிறிஸ்ரீன்**
**தரம் 12 C (2011)**


# Some Remarkable Achievements in the field of Sports




Cricket Team
Under 17 All Island Champion - 2005 (Astra Cup)



Under - 19 Foot Ball Team
District Champion & Provincial Runner up - 2009



Best Cricket Team of Northern Province
Selected for Division II - 2009




Tennis Team
District Champion - 2009



Carom Team
Northern Province Champion - 2009
Under 15

# செயல் திறன் மிக்க அதிபர்

எமது கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அடிகளார் குருத்துவத்திருநிலைப்படுத்தலின் 25வது ஆண்டு நிறைவை அடையும் இந்நாளில், அவர் தம் கல்விப்பணியினைப் பாராட்டுவதில் மனநிறைவடைகின்றோம். குருத்துவப் பணியுடன் கல்விப்பணியினைச் சமகாலத்தில் மேற்கொண்டுவரும் தந்தையாக இவர் விளங்குகின்றார். ஒரு இளம் குருவாகப் பாடசாலையில் காலடியெடுத்து வைத்த ஒருசில மாதங்களிற்கு முன்னரேதான் நானும் இப்பாடசாலையில் இணைந்துகொண்டேன். இதனால் சமகாலத்தில் இவரின் செயற்பாடுகளை என்னால் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.



1989ம் ஆண்டில் அருட்தந்தை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராக இணைந்துகொண்டார். அந்நாட்களில் ஆங்கிலமொழியைத் திறம்படக் கற்றுக் கொடுத்தார். இதனால் பல மாணவர்கள் பாடசாலைக்குப் புறம்பான ஆங்கிலப் போட்டிகளில் வெற்றியீட்டினர். 1992ல் கனிஷ்ட இடைநிலைப்பிரிவின் பகுதித் தலைவராகப் பொறுப்பேற்றார். கல்விச் செயற்பாடுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளென எல்லாச் செயற்பாடுகளையும் காலம் தவறாது நிறைவேற்றும் செயல் வீரராகத் திகழ்ந்தார். ஒரு வினாடியெனினும் காலம் தாமதிக்காது கல்விச்செயற்பாடு அல்லது இணைப்பாடவிதான செயற்பாடுகளை நிறைவேற்றுதல் என்பது இவரது தனிச்சிறப்பியல்பாகும்.

1994ல் சிரேட்ட இடைநிலைப் பிரிவுத் தலைவராகப் பொறுப்பேற்றார். பிரிவுத் தலைவராக இருந்தபோதிலும் சிரேஷ்ட இடைநிலைமாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியைப் புகட்டிவந்தார். பொருத்தமான திட்டங்களை உடனுக்குடன் வகுத்து பிரச்சினைகளிற்கு முகங்கொடுப்பதென்பது இவரின் கைவந்த கலையென்றால் அது மிகையாகாது. இக்காலப் பகுதியில் யாழ் குடாநாடு போரில் சிக்குண்டு தட்டுத்தடுமாறியது. பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டன. ஆனால் க. பொ.த. சாதாரண மாணவர் பரீட்சையை எதிர்நோக்கும் பரிதாப நிலை. இந்நிலையிலேதான் அதிபர் அவர்கள் ''கற்றல் பொதிகள்'' தயாரித்து மாணவர் வீட்டிலிருந்தே கற்பதற்கு நடவடிக்கையை மேற்கொண்டார். குடாநாட்டின் வேறு எப்பாடசாலையிலும் இத்தகைய திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை.

1998ல் உப அதிபராகப் பதவியேற்றதில் இருந்து அருட்தந்தையின் பணி புதிய பரிணாமத்துடன் உத்வேகம் அடைந்தது. ஆரம்பப் பிரிவிலிருந்து உயர்தரம் வரை நடைபெறும் செயற்பாடுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் யாவற்றையும் திட்டமிடல், செயற்படுத்தல் என்பனவற்றை முழுமையாகப் பொறுப்பெடுத்தார். பாடசாலையின் நீண்டகால அனுபவம் இவருக்கு

இவ்வாற்றலை ஏற்படுத்திக் கொடுத்தது. செயற்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மட்டுமன்றி, ஒவ்வொரு நிகழ்விலும் தானும் ஒரு பங்காளியாக மாறுவதில் பின்னிற்காத ஒருவராகத் திகழ்கின்றார். இதற்குப் பல உதாரணங்களை கூற முடியும். விளையாட்டுப் போட்டியில் கயிறு இழுத்தல் போட்டியில் முன்நிற்பார். பாடசாலைத் தினத்தன்று உதை பந்தாட்ட வீரராக வலம் வருவார். கல்விச் சுற்றுலா சென்றால் மாணவர் நீந்துவதைப் பார்த்துக்கொண்டிருக்காது தானும் நீச்சலின் அத்தனை வித்தைகளையும் செய்துகாட்டுவார்.





2008ல் அதிபராகப் பதவியேற்றது முதல் இந்நாள்வரை அருட்தந்தையின் செயற்பாடுகளின் மகத்துவத்தை சொற்களால் விபரிக்கமுடியாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கடமை, பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதை ஒவ்வொருவரும் நிறைவேற்ற வேண்டும். தலைவர் ஊழியர் என எவரும் இல்லை என்பதே அருட்தந்தையின் தாரகமந்திரம் ஆகும். இதனடிப்படையில் பாடசாலையை நிர்வகித்து வரும் தலைசிறந்த அதிபர் இவர்.

நான்கு வருடங்கள் மட்டும் பங்குப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டு பின்னர் கல்விப்பணியில் பெருமளவில் பங்கெடுத்து வரும் எம் பெருமதிப்புக்குரிய அதிபர் தந்தையவர்கள், பன்முக ஆளுமை மிக்க ஒருவராக விளங்குகின்றார். இவரின் சிந்தனை, சொல், செயல் அனைத்திலுமே இறைவனின் சித்தம் நிறைவுபெறவும், இறையாசீர் பொழியப்படவும் வேண்டிநிற்கின்றேன்.

**வே. அ. ஞானேந்திரன்**
**பொறுப்பாசிரியர்**
**சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு**

**"கிறிஸ்துவைப் பின்பற்றிச் செயற்படும்போது கிடைக்கும் அனுபவம் மிகவும் அலாதியானது"**

# குடும்பத்தில் ஒரு செல்வம், கரம்பொன் ஊரில் ஓர் முத்து, தம்பி எங்கள் செல்வன்...!



யாழ் மண்ணின் வாழ்பதியாம்
கரம்பொன் நகர் தத்தெடுத்த முத்தாய்
1958 தைத்திங்கள் இருபத்தைந்தில்
அன்னை ஜேற்றூட்டின் அரவணைப்பில்
தந்தை மனுவற்பிள்ளையின் திருவுருவில்
கருவிலே திருவுடைய நற்கர்ம வீரராய்
அன்பிற்கிரு அக்காளும் ஆதரவிற்கு
அண்ணாமார் நால்வருமாய் வாழ்த்தி நிற்க
அகமகிழ அவதரித்தான் எங்கள் செல்வன்

குறும்புச் செயல்களால் வீரத்தனங்கள் காட்டி
கெட்டித்தனங்கள் பேசும் அறிவின் சுட்டியாய்
அக்களிப்புடன் ஆனந்த மகுடம் சூட்டி
எல்லையில்லா உறவுகள் தோள் கொடுத்திட
குறும்புக்காரப் பயலாக சுழன்றடிக்கும்
புயலாக சுற்றித் திரிந்து
மழலைப் பராயத்தில் மண் சமைத்த
கோட்டை கோபுரங்கள் மனதளவில் கட்டி
பட்டாம் பூச்சியாய் சிறகடித்து
வானம் எனும் வீதியில் வலம் வந்தவன் எங்கள்
தம்பி

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று" எனும்
பொய்யா மொழிப்புலவரின் வாக்கிற்கொப்ப
கரம் பொன் நகரின் தியாகச் செம்மலாய்
ஆண்டவனின் அழைப்பை உணர்ந்து
அவ் இறையுறவிற்குள் இணைந்து
சான்றாளனாகி சரித்திரம் படைக்க
பச்சிளம் பாலனாய் பன்னிரு வயதில்
1970 இல் சிறிய குருமடம் சேர்ந்தான்.

கண்ணான கல்வி தனைக் கருத்துடனே கற்று
பொன்னான வாழ்வு தனைப்
பொது நோக்காய்க் கொண்டு
எந்நாளும் இறைவனையே தேடலாகக் கொண்டு
இறையழைப்பின் மேன்மையை தெளிவாகக் கண்டு
இளமையில் குருத்துவப் படிப்பையும் மேற்கொண்டு
சிந்தை சிறக்க உயர்கல்வி தேடி

பல்கலைக் கழக கற்றலையும் முடித்து
1985 ஆவணி 06 இல் குருவாக
திருநிலைப்படுத்தப்பட்டான் எங்கள் ஜெறோ......
ஆன்மீகம் வளர என்றும் அன்புடன் பணிகள் செய்து
அருளிலே மக்கள் மலர ஆர்வமுடன் தொண்டு செய்து
பங்குப் பணியில் பேராலயம், வட்டக்கச்சி,
கிளிநொச்சி, கரவெட்டி, என்று பணிவுடன்
சேவையாற்றி
பாங்குடன் மக்கள் பண்புடன் கருமமாற்றி
எங்கனும் புகழ் மணக்க போரின் மத்தியில்
எழில் பெற்று குருவாய் நின்று
ஏற்றம் கொள்ள வைத்தான் எங்கள் செல்வன்.....
கடமையின் வீரனாய்க் கருத்துடன் பணிகள் செய்து
காலத்தின் அகல் விளக்காய் காசினியில் வாழ்ந்து
மடமையைப் போக்கி
மக்கள் மனதில் இடம் பிடித்தவா
ஆண்டுகள் இருபத் தொன்று
கல்வியியலாளனாய் திகழ்ந்தாலும்
குருத்துவ வாழ்வினை இருபத்தைந்து வரை
சத்திய வேதம் போற்றும் விடிவெள்ளி நாயகனாய்
இறைவனுக்குள் இணைந்திருந்து வெற்றி கண்ட
செல்வ மாணிக்கம் நீ எங்கள் தம்பியடா.....

பள்ளி மாணவர்க்காய்
உன் உணர்வுகள் விழித்திருக்கும்
பண்பாளராக்குவதில் உன் பிரக்ஞைகள் பசித்திருக்கும்
பரிவன்பு முத்திரையாய்
உன் முகத்திரையில் மிளிர்ந்திருக்கும்
பரோபகார சிந்தை எக்கணமும் திறந்திருக்கும்
பாடசாலையில் என்றும் கண்கள் மலர்ந்திருக்கும்
பாரபட்சமற்ற பணி பளிச்சிட்டு விரிந்திருக்கும்
தந்தைக்குரிய தனிப்பாசம் தாய்க்குரிய ஈரநேசம்
சொந்தமாகிவிட உத்தம ஊழியனாய்
நம் மண்ணில் மலர்க உன் பணி

இன்று குருத்துவத்தில் ஆண்டவன் பணிதன்னில்
வெள்ளி விழாக் கொண்டாடும்
விழா நாயகனாம் ஜெறோ உன்னை
வாழ்த்துகின்றோம் அன்புச் சகோதரங்கள் நாம்
காலங்கள் உந்தன் பணியின்
கருத்தினைச் செவ்விதமாய்ச் சொல்லட்டும்
பல்லாண்டுகள் இறை நல் பணியில்
சிறப்புற்று வாழ்ந்திடவே வாழ்த்துகின்றோம்
எங்கள் நேசத் தம்பி செல்வனை.....

**அன்புச் சகோதரங்கள்**
**அக்கா, ஜோர்ஜ் அண்ணன்,**
**இராஜன், றூபி, றெஜி**

# நீ ஒரு புதிரா?

ஆறுதல் தேடுவோர்க்கு அன்பன்!
ஆக்கிரமிப்போர்க்கு "அந்நியன்"! – தூர நோக்குடையோர்க்கு வழிகாட்டி! – உண்மை வாக்குடையோர்க்கு நாட்காட்டி!
அருட்தந்தை ஜெறோ ஒரு ஆழி அலையா? அல்லது ஆழ்கடலா? அல்லது இரண்டும் சேர்ந்த கலவையா? பலருக்கு அவர் புரியாத புதிர். அவரை அறிந்தோர்க்கு அவர் உற்ற நண்பன்.

கொழும்புத்துறைக் குருமடத்தில் அவரை ஒரு சிரேஷ்ட மாணவனாகவும், அதன் பின் இளம் குருவாகவும் 2001ம் ஆண்டிலிருந்து புனித பத்திரிசியார் கல்லூரியின் உப அதிபராகவும் கண்டிருக்கின்றேன். கல்லூரியின் ஆசிரியர் குழாமைச் சார்ந்தவன் என்ற வகையில் நெருக்கமாகப் பழக, ஒன்றாகச் செயற்படப் பல சந்தர்ப்பங்கள் கிட்டின. அக்காலங்களில் அவரது பன்முகப்பட்ட ஆளுமையை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைத்தது.

"தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசி எடுக்கும்" என்ற பாடல் வரிகளுக்கேற்ப புதிய தேடல்கள் அறிவுப்பசியையும் அந்த அறிவுப்பசி புதிய தேடல்களையும் நோக்கி உந்துவதால் எந்த வேளையும் எதையோ புதிதாகப் படைக்கவேண்டும் என்ற உந்துதலோடு செயற்பட்டுக்கொண்டிருப்பவர். "Disturb me Lord when I am settled in my life" என்ற ஒரு பத்தனின் செபமே அவரது செபமாகவும் இருக்கும் என நினைக்கின்றேன். எதிலுமே அவர் முழுமையாக திருப்திபட்டுக் கொள்வதில்லை. இன்னும் நன்றாகச் செய்திருக்கலாம் என்பதே அவரது சுபாவம். இதுவே புதிய புதிய தேடல்களை நோக்கி அவரை உந்திக்கொண்டிருக்கின்றது என்று கூறலாம்.

எந்தப்பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும் அவற்றை திறம்படச் செய்யவேண்டும் என்ற கொள்கையுடையவர் ஜெறோ. அதற்காக கடினமாக உழைப்பவர் அவர். அந்தக் கடினமான தீவிர உழைப்பில் அவரோடு சேர்ந்து உழைப்பவர்கள் அவரது வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் இளைத்தும் களைத்தும் போவதுண்டு. இறுதியில் இவரே களத்தில் நேரடியாக இறங்கிவிடுவார். தன்னிலை மறந்து சாதாரண சிப்பாயாக மாறிவிடுவார். கதிரையில் இருப்பதைவிட களத்தில் நிற்பதே இவருக்கு மிகவும் பிடிப்பானதாகும். **களத்தில் நிற்பவனே காயப்படுவதுண்டு.** விமர்சனக் கணைகளால் இவரும் அடிக்கடி தாக்கப்படுவதுண்டு. ஆனால் இவர் சோர்ந்து போவதுமில்லை, வீழ்ந்து விடுவதுமில்லை.


கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளிலும் கல்வி நிர்வாகத்திலும் இவருக்கு ஆழ்ந்த அறிவும் நீண்ட அனுபவமும் உண்டு. தனது குருத்துவ வாழ்வின் நீண்ட காலத்தைக் கல்லூரிக்குள்ளே அர்ப்பணித்திருப்பவர் இவர். இப்பணியில் சலிப்படையாமல் தொடர்ந்து உழைத்துக்கொண்டிருப்பவர். பன்முக அறிவோடும் ஆற்றலோடும் மாணவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற உத்வேகத்தோடு செயற்படுபவர். புதிய புதிய களங்களை நோக்கி மாணவர்களை வழிநடத்திக் கொண்டிருப்பவர். இவரது இப்பணி இன்னும் பல காலம் தொடர இறைவனின் அருளை ஆசித்து நிற்கின்றேன்.

குருத்துவ வாழ்வின் வெள்ளி விழாவை எட்டிவிட்ட இச்சந்தர்ப்பத்தில் அருட்தந்தை ஜெறோவுக்கு இறையாசிர் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன். இறைபணியைத் தேர்ந்து கொண்ட இவர் "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பதற்கிணங்க இரட்டிப்பான இறைபணியை ஆற்றிக்கொண்டிருக்கின்றார். இறைவனின் அருளும் ஆசீரும் நற்சுகமும் ஆன்மீக பலமும் இவருக்குக் கிடைக்க இறைவனைக் கரம்கூப்பி வணங்கி நிறைவு செய்கின்றேன்.

"By Sowing a seed, you will harvest one;
By planting a tree, you will harvest tenfold;
By educating people, you will harvest one hundred fold"

**எஸ். ஏ. பொன்சியன்**
**திருகோணமலை**

# இளம் குருவாய், வளம் பெருக
## வலம் வந்த பதிவுகள்...



ஆண்டவர் ஆவி என்மேலே...



ஆயர் தியோகுப்பிள்ளையுடன்
தன் குருத்தோழர்கள் சகிதம்...



யாழ். பேராலயத்தில் புதிய குருவாய்
திருக்கர ஆசீர் அருளும் அதிபர்




கரம்பொன் செபஸ்தியார் ஆலயத்தில்
தந்தை ஜெறோவின் முதல் திருப்பலி நி
னைவுகள்



தனது முதல் திருப்பலி வரவேற்பு நிகழ்வில் ஆயர்கள் L.R.அன்ரனி (மாமா), தியோ
குப்பிள்ளை, கிங்ஸ்லி சுவாம்பிள்ளை இவர்களுடன் தந்தை ஜெறோ.

# Fr. Jero - A Priest Full of Fraternal Love

I am exceedingly happy to recall a few salient features of my sojourn in the North, on the occasion of the Silver Jubilee of the Priestly Ordination of Fr. Jero Selvanayagam. It was 2001 that my close connection began with St. Patrick's College Jaffna. I am thankful to my congregation, Marist Brothers of schools, for inviting me and encouraging me to come to the North of Sri Lanka as one measure towards building up of peace and unity in our beloved country. I take this opportunity to thank Rev. Bro. Michael de Waas the Provincial Superior at the time, for making that initiative a reality. When I set my foot first here in Jaffna, the welcome that I received from Rt. Rev. Dr. Thomas Savundaranayagam, the Bishop of Jaffna, Rev. Fr. Justin Gnanapragasam the Rector of St. Patrick's College then and all the Rev. Fathers and the lay teachers on the staff made me pitch my tent here at St. Patrick's College on a strong foundation, in no time.

After seving for many years in Marist Colleges in Sri Lanka, this opportunity received to serve at St. Patrick's became another new and rich experience in my apostolic life. I really enjoy working with the children here, since in addition to their hidden talents, their docility in following the instructions help to bring out the best in them. I am inclined here to pen down one of the salient contributions made towards the unity and peace in our country through sports, going beyond the petty differences based on caste, creed and religion, while we welcomed here in the North, the visiting schools teams from the South of Sri - Lanka for sport encounters, we were able to visit school in the South for rich sporting experiences through numerous tournaments and friendly games that we took part in.

At present my congregation, Marist Brothers have decided to begin a new community in the diocese of Jaffna. I am sure the hospitality and welcome received here at St. Patrick's College by Marist Brothers too could be a contributing factor for the above decision. I am thankful to God for making me the pioneer in this Marist journey in the North.

I would like to say a word of special thanks to one person who has been behind me, helping me and encouraging me all through my tenure at St. Patrick's College . He is none other than Rev. Fr. Jero Selvanayagam who celebrates the Silver Jubilee of the Priestly Ordination.

At the beginning in the capacity of the Vice-Rector and now as Rector of St. Patrick's College. He is a beacon in my service here at St. Patrick's, in the Northern province and in whole of Sri Lanka.

Having experienced your fraternal love and concern, Fr. Jero Selvanayagam our beloved Rector, I wish to invoke God's abundant blessing on you on behalf of the Marist Brothers on this occasion of Silver Jubilee of your Priestly Ordination.

Dear Fr. Jero, "May Christ be with you, Christ before you, Christ behind you, Christ within you, Christ beneath you, Christ above you, Christ at your right hand and at your left".

**Bro. Francis Antony F. M. S.**

# கரம்பொன் ஈந்த நாயகமே



செந்தமிழில் வித்தகனாய்
ஆங்கிலத்தில் அறிவகனாய்
ஈழமதை இனிக்க வைக்கும்
கரம்பொன் ஈந்த நாயகனே

குறையேதும் கண்டுணரா
குருக்கள் எனும் வரிசையிலே
குன்றாத ஒளி விளக்காய்
குருத்துவத்தில் இணைந்தவரே

இற்றைக்கு இருபத்தைந்து
இளைப்பில்லா நடை நடந்து
இறைபணியாம் திருச்சபைக்கு
இகமதிலே இறைபாலம் அமைக்க


பவனிவரும் பத்திரிசிய கல்லூரியில்
பயின்ற வித்தைகள் தாம் என்கொல்
பண்புடனே ஆசிரியர் குழாமதிலும்
பகுதித் தலைவராக நும்பணி கண்டுரைக்க

என்னென்போம் நும் திறமை
எண்டிசையும் உளமாரப் போற்ற
எம் பள்ளியில் அதிபரானீர்
என்றும் நிலைத்திருக்கும் - நும்பணி

மாணவர் தம் நலன் கருதி
மாபெரும் துணை புரிவீர்
மாணவர் வெற்றியடைய
மாரி மழையாக பணி புரிவீர்

விளையாட்டு களமதிலும்
விருப்புடனே களம் அமைத்து
விலைமதிப்பில்லா கிண்ணங்களை
வியப்புடனே நாம் காண்போம்

தாயாம் திருச்சபைக்கு
தாழாது என்றும் நும்பணி
தாரையாக வழங்கிடுவீர்
தாழ்மையுடன் வாழ்த்துகின்றோம் -
இந்நாளில்
வாழ்க! வாழ்க! வாழ்க!




திருமதி ஜே.வீ. சுகிர்தராஜன்
ஆசிரியை

# கல்லூரியில் கரையும் பணியாளனாக...

மீன் வளமும், தேன் சுவையும் நிறைந்தொழுகும் ஊரது. அந்நியர்கள் ஆட்சியதில் யாழ். நகரத்தைக் காத்திட உதவிய காவலூர் என்று பெயர்பெற்ற ஊர்காவற்துறையின் கரம்பொன் மண்ணில் நீக்கிலாப்பிள்ளை மனுவற்பிள்ளை, இராஜேந்திரம் ஜேற்றூட் இராசம்மா தம்பதி களுக்கு அருந்தவப் புத்திரனாக 25 ஜனவரி 1958ல் பிறந்தார். கரம்பொன், புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருமுழுக்கினைப் பெற்று ஜெறோ செல்வநாயகம் என்ற பெயரினைப் பெற்றுத் திருச்சபையின் அங்கத்தவனாகவும், இறைவனின் பிள்ளையாகவும் மறுபிறப்பு அடைந்தார். தன்னுடைய ஆரம்பக் கல்விதனை கரம் பொன் புனித செபஸ்தியார் ஆரம்பப் பாடசா லையில் கற்று இடைநிலை மற்றும் மேல் நிலைக் கல்வியினை முறையே காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியிலும் ஒழுக்கத்திற்கு பெயர் பெற்ற புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஒழுங்குறக் கற்று முடித்தார்.

ஏராளமான குருக்களை ஏன் ஆயர் களைக் கூட உருவாக்கித் தந்த தீவகத்தைச் சேர்ந்த இவரையும் இறைவனின் அழைப்பு விட்டு வைக்கவில்லை. ஆதலால் உயர் தரத்தில் கணிதபாடத் துறையினில் மாண வராக இருந்த இவர், இறையழைத்தலை ஏற்று கணிதபாடத்துறையை துறந்து கலைப் பிரிவில் கற்றுத் தேறினார். இவர் தனது குருத்துவப் பயிற்சியினைக் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் பின்னர் தனது இறுதிக் குருத்துவப் பயிற்சியி னைக் கண்டியிலுள்ள அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியிலும் சிறப்பாக மேற்கொண்டார்.

இறைவனின் புனிதத் திருச்சபையின் பணியாளனாக தன்னைப் பணிக்குருத்து வத்தில் ஈடுபடுத்திக் கொள்ள ஆகஸ்ட் 6 1985ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்




படுத்தப்பட்டார். குருவாகிய பின்னும் கல்வியிலே அவர்கொண்ட தீராத ஆவலின தும், ஆசையினதும் விளைவாக யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் கலைப்பிரிவினில் கற்றுத்தேறி 1981ல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலைப்பட்ட தாரியாகித் தன் பெற்றோருக்கும், தன் சொந்த ஊருக்கும், யாழ் திருச்சபைக்கும் பெருமையும், மகிழ்ச்சியும் தேடித்தந்தார். "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" என்ற வள்ளுவன் வாய்மொழிக்கு இலக்கணம் வகுத்தார். தொடர்ந்தும் தான் கல்வியிலே கொண்ட பேரவாவினால் தேசிய கல்வி நிறுவனத்தில் பயின்று 1994ல் "பட்டப்பின் கல்வி டிப்ளோமா" பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். பட்டங்களைப் பெற்ற போதிலும் கல்வியிலே உயர்வேன், உயர்வேன் வானத்தை எட்டிப்பிடிக்குமளவும் உயர்வேன்". என்பதைப் போல இங்கிலாந்து சென்று இலண்டன் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற்று கல்வி முதுமாணிப் பட்டத்தினை 1997ஆம் ஆண்டதிலே பெற்றுக் கொண்டார். இவர் கல்விப் பணியினில் கால்பதிக்கும் முன்னர் பல பணித்தளங்களில் பணியாற்றி யுள்ளார். 1985ஆம் ஆண்டினிலே யாழ் பேராலயத்திலே உதவிப் பங்குத் தந்தை யாகப் பணியாற்றி அப்பங்கினைச் சேர்ந்த மக்களின் நன்மதிப்பினைப் பெற்றுக் கொண்டார். 1986ல் கிளிநொச்சியைச் சேர்ந்த வட்டக்கச்சிப் பங்கிலே பங்குப்பணிகளை மேற்கொண்டார். 1987ஆம் ஆண்டு கரவெட்டி

புனித அந்தோனியார் பங்கிலே பணிசெய்து பலரைத் தம்பக்கமாக ஈர்த்துக்கொண்டார். இதுவே இவர் இறுதியாக பணிசெய்த பணித்தளம் ஆகும். பின்னர் அவர் தான் கற்ற பாடசாலையிலேயே தனது கல்விப்பணிக்கான முதல் அத்திவாரத்தை இட்டார். தன்னை வளர்த்திட்ட இக்கல்லூரி திடமான முன்னேற்றப்பாதையில் செல்லவேண்டும் என விரும்பிய இவர் 1989ல் இப்பாடசாலை விடுதிக்காப்பாளராகவும், ஆசிரியராகவும் தன்னை இணைத்துக் கொண்டார். தனது சிறப்பான பணியார்வத் தினால் 1992ல் இவர் கனிஷ்ட இடைநிலைப் பிரிவுப் பகுதித் தலைவராக உயர்த்தப் பட்டார். பாடசாலை விழாக்களின் போது பம்பரம்போல சுழன்றோடி எல்லாவிதமான பணிகளையும், தன்தலையில் சுமந்து கொண்டு அவற்றைச் செய்து முடிப்பார். பாடசாலை நிகழ்வுகள் நிறைவுபெறும் வரை அவர் ஓயாது சுழன் றோடிக்கொண்டே இருப்பார். அருட்தந்தை பிரான்சிஸ் யோசப், அருட்தந்தை A.I.பேர்ணாட், அருட்கலாநிதி ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆகியோரின் கீழ் பணியாற்றிய அனுபவத்துடன் 2008 ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி யாழ். பேராலயத்தில் இடம்பெற்ற திருப் பலியுடன் இக்கல்லூரி அதிபராகிப் பதவி யேற்றார். தற்போது Basket ball court புனர்நிர்மாணம் செய்வதற்கான முன் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் பாடசாலையூடாக வீதி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக தொடர்ந்தும் தான் கற்ற பாடசாலையினை முன்னேற்ற நடவடிக் கைகளை மேற்கொள்ளும் நம் அதிபரின் யூபிலி தினத்தில் அவர் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

**அ. யூட்வலன்ரைன்**
**12C (2010) A/L**

**"பிறருக்காக உங்களை அர்ப்பணிக்கும்போது ஏற்படும் பயமுறுத்தல்களையும் சாவையும் கண்டு அஞ்சவேண்டாம் கடவுள் என்றும் உங்களுடன் வருகிறார்"**

# யாழின் ஒரு புதிய விடி வெள்ளியே...



உண்மையின் இறைவனின்
உன்னதமான குரல் கேட்டு
உளமார பணிசெய்து
உறங்காமல் விழித்திருந்து
உயர்ந்த சேவைதனில்
ஐந்தைந்து ஆண்டுகள் கழித்திட
குருத்துவத்தில் உதித்ததே
இவ்வினிய வெள்ளி நாள்

குருமடச் சோலைதனில்
குன்றாத கல்விதனை நாம் கற்றிட
குன்றாக நாம் நின்று
குறையின்றி உருவாக்கம் பெற்றிட
குருத்துவ விதைகள் தமை - எம்
உள்ளந்தனில் விதைக்கின்ற குருமணியே
அருட்பணி ஜெறோ செல்வநாயகமே

காலங்கள் மாறினாலும்
காயங்கள் தோன்றினாலும்
காவிய நாயகன் இயேசுவின்
களமான வீரப்பலிதனில்
காலங்கள் பல நீர் கண்டு
காப்பியம் படைத்திட
கரம் கூப்பி உளமார வாழ்த்துகின்றோம்
உம் இனிய குருத்துவப் பணி வாழ்வுப் பயணம் தனில்!

**புனித மாட்டினார் குருமட குழுமம்**

"அமைதி என்பது
நல்ல மனிதர்களிடம் தாராளமாக நிறைந்திருப்பது; தாராள மனம் கொண்டது ;
நேர்மையான இறிக்கோள் கொண்டது"

# You are Precious in My Sight

It is the 21st of June, the day of the Spell Master Competition. I am at home, nervously preparing for the evening's event. The phone rings. It is Fr. Rector. He says he will be visiting us that day. In a few minutes, he arrives. He asks me how I am preparing for the competition. He blesses me and says he will be there to watch the Grand Finals. Then he prays with whole family asking God's strength and guidance for me for that evening.

When we arrive at the studio, he is already waiting for us with the group of Old Boys whom he had invited to be present. The sight of Fr. Rector and the Old Patricians boosts my morale as I enter the Sirasa T.V Studio. One by one, the college anthems of each competitor is played on the stage. When my turn comes, I could hear his powerful voice and it brings me the courage and strength I need. He stays throughout the competition. At the end, when I am one of the runners up, he is there to encourage me.

The encouragement he gives his students is not only in public events like this one. It is a part of every school day and also of time after school hours. He visits the school grounds in the evenings to see how the students are getting along with their practice. Even though I am not a regular team member, whenever I missed practice, he asks me what had prevented me from coming.

If a student is absent from school for a few days, he will ask him the reason when he next sees him in the school corridor. He knows all the students by their name and family background. No one can escape by telling him something untrue.

When a students wins in any competition outside the school, he meets him personally to congratulate him. He has introduced the felicitation of teachers on their birthdays in the morning assembly; in this way he teaches us to express our gratitude to elders.

Thus, he gives life to God's Words, "You are Precious in My Sight".

**S. Chelvanithilan**
**(Grade 13M) 2011**

***"He is available for all manner of missionary tasks in several different fields"***



Fr. Jero with his Family members



Fr. Jero with his Uncle Bishop Emeritus L.R. Antony

25

# என் நினைவுகளில் Fr. ஜெறோ...



இறைபணியிலே இருபத்தைந்து ஆண்டுகளைச் செவ்வனே நிறைவு செய்யும் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அடிகளாரைப் பற்றி என் நினைவுகளுக் குள்ளே புதைந்தேன். ஆகவே நெஞ்சுக்கு நேர்மையாக, உண்மைக்குச் சான்றாக, ஆசிரியனுக்கு மாணவன் கொடுக்கும் நன்றியாக, எல்லாவற்றிற்கும் மேலாக கடந்த 15 வருடங்களுக்கு மேல் அவருடன் பழகிய ஓர் அழகிய நட்புக்கு நண்பனாக நின்று உங்களுடன் அருட்தந்தை ஜெறோ அவர்களை, அவருடைய சவால் நிறைந்த, சாதனை படைத்த வாழ்வை நினைத்துப் பார்க்க விரும்புகின்றேன்.

அடக்கமான ஆனால் மிக ஆழமான சிந்தனைத் திறனும், சீரிய நல் ஒழுக்கமும், தூய நல் வாழ்வும் அருட்தந்தை ஜெறோ அவர்களை அணி செய்துகொண்டே இருக்கும். தனது ஆற்றல், திறமைகள் அனைத்தையும் பகிர்ந்து பிறர் வாழ உதவிடும் இவர் பண்பு இவருக்கே உரிய ஒரு அற்புதமான தனிப்பட்ட விருப்பு.

இவரைப் பல கோணங்களிலே நாங்கள் பார்க்கலாம். ஒரு மனிதனுக்குள்ளே ஒரு சில ஆளுமை, திறமை, ஆற்றல் நிறைந்த பண்புகளைப் பார்க்கலாம். ஆனால் இவரிடத்திலே பல்வேறு ஆற்றல்கள், திறமைகள் நிறைந்திருக்கின்றனவே! இதற்கு விடை இறைவனிடம் தான் கேட்க வேண்டும். அத்தனை அற்புதமான பண்புகளையும் தனி ஒரு மனிதனுக்குள்ளே செதுக்கி எங்கள் மத்தியிலே குன்றிலிட்ட தீபமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்தான் அருட்தந்தை ஜெறோ.

**இவர் ஓர் ஆன்மீகவாதி**

இறையுறவின் ஆழத்திலே ஆன்மீகத் தேடலை நிறைவாகத்தான் தேடியது மாத்திரமில்லாது தனது இறை அனுபவத்தை பகிர்ந்து கொடுப்பதிலே அருட்தந்தை அவர்கள் திறமையானவர். தான் அனுபவித்த இயேசுவை அனைவரும் அனுபவிக்க வேண்டுமென்று விரும்புபவர். குறிப்பாக குருமட மாணவர்களுக்கு மாத்திரமில்லாது குருத்துவ நண்பர்களுக்கும் தனது ஆன்மீகத்தை பிழிந்து கொடுத்து இறை சித்தத்தை அடிக் கடி சொல்லிக் காட்டுவார். ஆகவே இவர் ஓர் ஆன்மீகவாதி.

**இவர் ஒரு மறையுரையாளன்**

குருத்துவ வாழ்வின் குலக்கொழுந் தாய் தன் வாழ்விலே பணியை ஏற்றுக் கொண்ட அடிகளார், நற்செய்தி அறிவிப்பின் உன்னதமான மறையுரையிலே பெயர் போனவர். கவர்ச்சியான மொழிநடையோடு, ஆழமான ஆன்மீக விளக்கங்களை, இறை வார்த்தை ஒளியிலே சிந்தித்து, இலகுவான தமிழ்ப் பாணியிலே இயல்பாக ஆனால் மிக ஆணித்தரமாக தனது மறையுரையை வழங்குவதில் அடிகளார் சிறந்தவர். தமிழில் மாத்திரமல்லாது ஆங்கில மொழியிலேயும் அடிகளார் ஆற்றிய, போதித்த மறையுரைகள் இன்னும் எம் செவிகளிலே கேட்கின்றன. ஆகவே இவர் ஒரு மறையுரையாளன்.

**இவர் ஒரு கல்வியாளன்**

எல்லோரும் படிக்கிறார்கள், சித்தி யெய்துகிறார்கள், பல்கலைக்கழகங்களுக்கும் செல்லுகிறார்கள். இதை நாம் அறிவோம். ஆனால் ஒரு சிலர் நன்றாகப் படிக்கிறார்கள், திறமையாக சித்தியடைகிறார்கள், ஆளுமை யோடும், ஆற்றலோடும் தாம் பெற்ற கல்வியைக் கொடுக்கிறார்கள். அருட்தந்தை அவர்கள் நன்றாகப் படிப்பவர், திறமையாகச்

சித்தியடைபவர், தான் பெற்ற கல்விச் செல்வத்தை தனது ஆளுமையோடும், பிற ஆற்றல்களோடும் செதுக்கித் தருபவர். அவருடைய மாணவர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமையடைகின்றேன். கல்வியை ஒரு ஆன்மீகமாக, ஒரு கலையாகக் கண்டு கல்வி ஆன்மீகத்தை, உலக யதார்த்தத்தோடு ஒப்புநோக்கி கலைநுட்பத்தோடு கொடுக்கும் பண்பு அடிகளாருக்கும் உரிய ஒரு தனித்து வமான பண்பு. தான் சுவைத்த கல்வி அமுதை பிறரும் அனுபவிக்க வேண்டுமென்று தனது சக்திக்கு அப்பால் சென்றும் தலை சிறந்த கல்வியை இவர் இன்றும் வாரி வழங்குகிறார். ஆகவே இவர் ஒரு கல்வியாளன்.

**இவர் ஒரு பாடகன்**

அழகான குரல் வளம். அதற்குள்ளே அற்புதமான அசைவுகளும், நெளிவுகளும், தத்துவமாக, உயிரோட்டமாக பாடல்களைப் படைக்கும் பண்பு. இவை அனைத்திற்கும் சொந்தக்காரன் அடிகளார் அவர்கள். எல்லாவற்றிற்குள்ளும் ஒரு நிறைவை எதிர் பார்க்கின்ற இவருக்கேயுரிய ஒரு பண்பின் ஆழத்தினாலே எந்த சிறிய விடயமென்றாலும் அதை நிறைவை நோக்கி வழிநடாத்துவார். அதற்கு இவர் கொடுக்கும் பாடல் பயிற்சிகள் சான்றாக அமையும். தான் பெற்ற ஆண்டவர் அள்ளிக் கொடுத்த சங்கீத ஞானத்தையும், குரல் வளத்தையும் பகிர்ந்து கொடுத்து தமிழ், ஆங்கில, இலத்தீன் பாடல்களை இசையமைத்தவர்கள் பெருமை கொள்ளும் அளவுக்கு பாடி, பயிற்றுவிக்கும் பண்பு இவருக்கேயுரிய ஒரு தனிப்பண்பு. ஆகவே இவர் ஒரு பாடகன்.

**இவர் ஒரு நெறியாள்கையாளன்**

கலை என்பது கடவுளின் கொடை. அந்தக் கலைப்படைப்புக்களினூடாக இறை வனைக் கொடுப்பதும் ஒரு கலைதான். அடிகளார் அவர்களின் கலைப்பணியையும், கலைச் சேவையையும் பலரும் அறியாமல் இருக்கலாம். 'கலை வழி இறை பணி' என்கின்ற விருதுவாக்கோடு இயங்கும் திரு மறைக் கலாமன்றத்தின் 'உதவி இயக்குனராக' அடிகளார் பணியாற்றினார் என்பதை நினைவுபடுத்துகின்றேன். நடிப்புத்திறன் இவரிடத்திலே இயல்பாக இருந்ததினாலே நாடகங்களை நெறிப்படுத்துவதில் தனக்கே ஒரு தனிப்பட்ட பாணியை வைத்துக்கொண்டு அத்தனை பாத்திரங்களையும் தத்துவத் திறனோடு சொல்லிக்கொடுத்து, வித்துவத் தன்மையோடு, அற்புதமாக நெறிப்படுத்தும் ஆற்றல் இவர் வாழ்வில் நான் கண்ட சிறப்புக்களிலே ஒன்று. தமிழ் நாடகங்களை மாத்திரமல்லாது ஆங்கில நாடகங்களை நெறிப்படுத்துவதில் நிகரான சிலருக்கு ஈடாக இவரையும் குறிப்பிடலாம். ஆகவே இவர் ஒரு நெறியாள்கையாளன்.

**முடிவாக**

பொற்குடத்திற்குப் பொட்டிட்டுப் பார்ப்பது போல அடிகளார் என்கின்ற பொற் குடத்திற்கு ஆங்காங்கே சில பொட்டுக்களை வைத்துள்ளேன். உண்மையிலேயே நான் கொடுத்த இவரின் பண்புகளும், திறமை களும், ஆற்றல்களும் எனக்குப் பிடித்த, நான் இவரால் கவரப்பட்ட ஒரு சில மாத்திரமே. இன்னும் ஏராளமானவைகளுக்கு இவர் ஏற்புடையவர், சொந்தக்காரன்.

இறுதியாக

இறைவன் கொடுத்த  
இவரை – எம்  
இதயத்திலே தாங்குவோம்..  
இன்னும் பல்லாண்டுகளை  
இறைவன் பணியிலே  
இவர்  
இதமாகக் கழிக்க  
இவருக்காக  
இறைவனை  
இறைஞ்சுவோம்.

அன்புடன்  
பாலதாஸ் பிராயன்

# எம் அன்பு ஆசானின் படிக்கட்டுக்கள்

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தெட்டு
தைமாதம் இருபத்தைந்தாம் நாளதில்
யாழ் மண்ணில் முளைத்ததோர் அற்புத அரும்பொன்று
எங்கே முளைத்தது?
யாவரும் அறிந்த இடம்
ஊர்காவற்துறை மண்ணில்
கரம்பொன் என்னுமிடத்தில்!
மனுவறபிள்ளை இராசம்மா தம்பதியினருக்கு
இறைவன் அளித்த அன்புப் பரிசது
ஜெறோ செல்வநாயகம்
இது தானா அவர் பெயர்
பெற்றோர் மூத்தோர் பெயர்களை
தம் பிள்ளைகளுக்கு இடுவதுண்டு
அது அம்மூத்தோர் ஞாபகமாம்
உம் பெற்றோர் உமக்கு
செல்வநாயகம் எனப் பெயர் சூட்டினர்
திருமுழுக்கு பெற்றுநீர்
திருச்சபையில் இணைந்த போது
புனித செபஸ்தியார் ஆலயமே
இன்பக் கடலில் மூழ்கியது
வாழ்வின் ஆரம்பக் கற்றலைநீர்
கரம்பொன் செபஸ்தியார்
ஆரம்பப்பாடசாலையில் கற்றுக் கொண்டீரே
யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி
என்னுமோர் சொர்க்க பூமி
அதில் நீர் மாணவனாகவே
கால் பதித்து விட்டீர்

ஆயிரத்துதொள்ளாயிரத்து எண்பத்தைந்து
எட்டாம் மாதம் ஆறாம் நாளில்
திருச்சபையில் நீர் ஒரு குருவாக
தடம்பதித்தீர் தடம்பதித்தீர்
குருவாக நீர் ஆற்றிய சேவைகள்
எத்தனை? எத்தனை?
பங்குக் குருவாக
மறைபரப்பினீர்
ஓர் ஆசிரியனாக நீர்
அறிவூட்டினீர்
ஆலயத்திலும் பாடசாலையிலும் மட்டுமல்ல
யுத்த களங்களுக்குள்ளும் நீர்
மறையும் கல்வியும் கற்பித்தீர்
ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்பதில்
பத்திரிசிய மண்டபத்தில்
விண்மீன் ஒன்று இணையக்கண்டனர்
பத்திரிசிய குடும்பத்தில்
ஆசிரியனாக கற்பித்து
விடுதிக் காப்பாளனாக வழிநடத்தி
பகுதித் தலைவராக தலைமை ஏற்று
உபஅதிபராகிப் பின்
அதிபராக மிளிர்ந்து இன்று குருத்துவத்தில்
வெள்ளிவிழா காண்கிறீர் உம் வாழ்வில்
நீர் ஏறிய படிக்கட்டுகள்தான் எத்தனை!
தொடர்க நும் உயர்ச்சி!
வளர்க நும் பணிகள்!
வாழ்க நும் சேவை!

**அமில்ரன்**
**தரம் 12C (2011)**

"யாரெல்லாம் கடவுளின் வார்த்தைகளை
எடுத்துரைக்கிறார்களோ அவர்கள் எல்லாரும் சவால்களைச்
சந்தித்துத் துயருறர வேண்டும்"

# நம் அதிபர்

ஒரு பாடசாலை என்பது ஒரு தனி உலகம். அதில் பல விடயங்களைக் கற்க இருக்கும் என்பது எல்லோரும் அறிந்த உண்மையே. ஒரு மாணவன் அதன் செல்வம். அவனை உருவாக்குபவர் ஆசிரியர். இவர்கள் இருவர் பற்றியும் யாவரும் அறிந்ததே. இவர்களை வழிநடத்த ஒருவர் தேவை. அதற்கு தகுதி உடையவரே அதிபர் ஆவார்.

இப்படிப் புகழ்பூத்த புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபர்தாம் வணக்கத்துக்குரிய ஜெறோ செல்வநாயகம் அடிகளார். இவர் 1958ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி பிறந்து, குருவாகி சில பணி தளங்களில் அறிமுகமாகி, பின் எமது பாடசாலையில் நுளைந்து ஆசிரியராகி, பகுதித்தலைவராகி, உபஅதிபராகி இன்று அதிபராகவும் இருக்கிறார் என்றால் அவரிடம் தனித்திறமை உண்டு என்பது யாவரும் அறிந்ததே.

இவர் பதவி ஏற்பு விழா தொடங்கிய உடனேயே இவரது புதிய கொள்கைகள் பாடசாலை மாணவர்களால் உள்வாங் கப்படத்தொடங்கின. உதாரணமாக ''மாண வர்களின் குறிக்கோள்கள் ஒவ்வொரு பத்திரிசிய கல்லூரி மாணவனின் நாட் குறிப்பில் தெளிவாக குறிக்கப்பட வேண்டும்" எனக்கட்டளை பிறப்பித்தார். இதனால் மாண வர்கள் தமது இலட்சியங்களைத் தெளிவு படுத்திக் கொண்டனர்.

இவர் சிறுசிறு துளியாய் பாடசா லையில் ஏற்படுத்த தொடங்கிய மாற்றம் கல்லூரியின் தரத்தை மேம்படுத்த உதவியது உண்மையே.

பாடசாலை நிகழ்வுகளைத் திறம்படச் செய்யும் இவரின் ஆற்றல் தலைமைத்துவத் திறனை எடுத்துக்காட்டுகிறது. இவர் பத விக்கு வந்த வருடமே நமது பாடசாலையில் வருடாந்த மெய்வல்லுனர் போட்டியில் 12 சாதனைகள் (Records) விளையாட்டு தினத் தன்று முறியடிக்கப்பட்டன. இது இவரின் பக்க பலத்தாலேயே நடந்தது என்பது உண்மை.

தற்போது நமது பாடசாலை ஒரு பூங்காபோல் அழகிய தோற்றம் அளிக்கிறது என்றால் அதற்கு காரணம் நமது அதிபரே. இது மாண வர்களை தமது இல்லத்தில் இருந்து கல்வி கற்பதைப் போன்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றது. மாணவர் கல்வி கற்ப தற்கான ஆர்வத்தை இச் சூழல் ஏற்படுத்தும் என்பதே இவரது எண்ணம். அது ஈண்டு நிறைவேறுகிறது எனலாம்.



ஒவ்வொரு ஆசிரியர் பிறந்த தினத்தையும் நினைவு கூரும் நிகழ்வை எமது அதிபரே ஆரமபித்தார். இதனால் ஒவ்வொரு ஆசிரியரும் நன்றியோடும் நினைவு கூறப்பட்டு கௌரவிக்கப்படுகின்றார்கள். இது அவர்களின் சேவைக்குரிய ஒரு மதிப்பாக அமைவதோடு நமது பாடசாலையில் கல்வி கற்பிப்பதற்கு ஆர்வத்தை ஏற்படுத்துகிறது.

நமது அதிபர் முடிவு எடுப்பதில் வல்லவர். இது இவரின் தலைமைத்துவ பண்பை எடுத்துக் கூறுகின்றது. இவரின் குணாதியமும் இவரின் தலைமைத்துவத்தில் செல்வாக்குச் செலுத்துகிறது.

இவரைப் பொறுமைசாலி என்று கூறுவதை விட, இரக்க குணம் படைத்தவர் என்று கூறுவதே சரியானது. மாணவரின் பிரச்சினைகளைத் தீர விசாரித்து நல்ல முடிவு எடுப்பார். இப்படிப்பட்ட குணாதிசயம் காரணமாக இவரைப் பற்றிப் பெருமையாக பேசுவதில் தவறேதுமில்லை.

இவரின் ஊக்கமான நடை, சுறுசுறுப்பு, அயராத உழைப்பு என்பன இவருடைய சிறந்த குணங்களாக கருதலாம். இவர் ஒரு சிறந்த மனிதர்.

இவர் எமது பாடசாலைக்குச் செய்த சேவைகள் பலப்பல. இவரும் எதிர்காலத்தில் சிறந்த அதிபர்களுள் ஒருவராகத் திகழ்வார். சேவை – சேவை என்று எமக்காக உழைக்கும் எமது அதிபர் என்றென்றும் போற்றுதற் குரியவர்.

**ட. சஞ்சீவ்**
**தரம் 12M (2011)**

## பத்திரிசிய பாரம்பரியம் கைமாறும்

### அந்த நிகழ்வின் ஒளிப்பதிவுகள் சில



# நீங்கள்!

அவனியில் அவதரித்தவர்களுள்

ஆயிரத்தில் ஒருவன்

எட்டுவயதில் ஆடி ஓடித்திரிந்த பருவத்தில்

தீராத விளையாட்டுப்பிள்ளை

அறிவைப் பெற்ற அக்காலத்தில் மாண்புமிகு மாணவன்
குடும்ப வாழ்வின் குதூகலத்தில் குடும்பத்தலைவன்
பாசப்பறவைகள் கூட்டத்தில்

பாசமலர்

அன்பே வா என அன்பு கூறி அரவணைப்பதில்

அன்புக்கரங்கள்

பொறுப்புக்களை பொறுமையுடன் ஆற்றுவதில்

நினைத்ததை முடிப்பவன்

காத்துக் கிடந்து காரியமாற்றுவதில்

காவல்காரன்

வரலாறு படைத்து பாரம்பரியம் காப்பதில்

தாஜ்மஹால்

இதயங்களை வென்று இன்பங் காண்பதில்

இதயக்கனி

வெள்ளாடை தரித்த உள்ளங்கவர்ந்த

வெள்ளை ரோஜா

வசந்தத்தின், வைகறையின்

வசந்தராகம்

தந்தைக்கு தந்தையாக வழிகாட்டி வளர்ப்பதில்

தெங்வமகன் தங்கமகன்

கல்லூரியைக் கரம் பிடித்து காலமெல்லாம் காக்க

தேடி வந்த மாப்பிள்ளை

உண்மைக்கு உரமாக, உளமார உயர்வான

உத்தமன்

உள்ளத்தில் உள்ளதை உலகறியச் செய்வதில்

உலகம் சுற்றும் வாலிபன்

உயர்வான எண்ணங்கள், உயரிய தொலைநோக்கு
இத்தனையும் கண்டு

உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்.

காலங்கள் கரையினும் கடவுளின் கருணையில்
காத்திடும் அவன் கரங்களில் பல்லாண்டு வாழ்க.

**ஸ்ரனிஸ்லாஸ் ஸ்ரெவின் டிஷொந் 7A**

# Come on, everyone-let's give a cheer!

At silver dawning, lovely birds singing
High-hung bells swiftly chanting
August breeze sweetly murmuring
"sh...." SPC portals softly humming.

Ay! Lend your ears you will hear
The wind brings it intensly near
Fr.Jero's passion on Priesthood, very clear
This is his 25th year, definitely sure.

Priesthood holder! Philanthropic sirdar
Could you say whose model you are?
Puzzling? with those who suffer
Wait till read that is better.

**Melchizedec** is first in the scripture
To serve a privilege in this structure
King of Salem a priest of God the order
Is your resemblance in this register?

Are you **Aron** the Anointed Priest?
The blood as a priest he bears.
Presenting Israel's prayer of plight
Perfume the holy throne by tears

Priests are shepherds like **David**
He led the sheep away from rod.
Protected Israel from Goliath the cad
Would you be as this strenuous lad?

Realistic Pastor!
**Joshuah** like leader
Is responsibility on your shoulder?
Trust the Lord to make stronger

Anything you reflect **Eli** the prophet?
Get shelter under His Guiding Spirit
To be voiced with full of might
His sublime character is always delight

**John the Baptist** was destined to suffer
Honey & Grasshopper he ate forever
Preaching with courage he gave up never
As that life, would you hover?

When took vows for divine role
Did you say "coming" & marched away
To stride with Him like **Samuel's** call
For many a night & many a day

His kingdom needs your attention
Would you take heed as **Peter** the Apostle ?
" follow" he heard invitation – and
Ran away left all his notions

Have met Jesus the way Damascus?
Like **Paul** from Tharsus
Who served by being Celibate
To show humanity God's gate.

Being justify those who transgress
Do you comfort in their distress?-as
His wise saws in his kingdom
With the words of **Solomon's** wisdom.

Have you consecrated hands like **Christ?**
The most highest of all priests
Clouds of incense from his hand
Arise with redeeming Odour sweet.

So tired,reading questions?
To respond this marvel excavation
Gratify your sole intention - oh!
You will not be really shaken

I hear you whisper "What am I?"-as
Priests in this century cry.
Struggling with the life hi-fy-your
Piquant search never will dry.

Priesthood lover! you never falter
Do not leave heavenly father
Shape your divine character-to
Fulfill the duties further

# Some Significant visits of the VIPs



The visit of the Most Revd. Dr. Mario Zenario
(Apostolic Noncio in Sri Lanka) in 2008



D.S.D. Silva
The Chairman SL. Cricket




Mr. Kumar Sangakara's Visit to Our College (The Captain of S.L.C.T - 2010)



Colombo Team - Ibagumuwa Central College
with our team



Visit of SL. Cricket Board

Why searching for a model
In a world hooked on money & material?
Nothing is measured in your level - but
You are unique this is real.

You could count on perfect symbol
To always be gentle and humble
To be immune to sins cramble
And never ever stumble

It's the time for Silver rains
See the future "Golden sheaves"
Handle dull and forget the bitters
Keep count of only shining hours.

It's another year to create wide
Precious memory together ride
Look back with happiness and pride
Upon the twentififth year, it's a stride

Nobodies hero !
How to measure you in words: zero
Your profession that's the highest
Of the men who are wisest

Stars that shim in the night
Say his was ever bright
a priest who is Christ unite
who seldom cross and rarely fight

Wow! twentyfive quatrains clinging
About "five & twenty "years to sing
Is it for me an expiation?
It is to you a consecration.

Come everyone - let's give a cheer!
In celebration of our father dear
May the Good Lod's Blessings shower
to
Guide him on His way,
no fear.

**Christine. Y. R.**

"May the Lord continue to bless him so that he can continue to accompany the people being Christ's Presence among whom he serves"

# என் கடன் பணி செய்து கிடப்பதே



ஈழமணித் திருநாட்டின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணத்தில் அமைந்த கரம்பொன் பதியில் திரு. திருமதி மனுவேற்பிள்ளை ஜேற்றூட் இராசம்மா தம்பரியினரின் இல்வாழ்வில் அறிவறிந்த மகனாக ஆயிரத்து தொளாயிரத்து ஜம்பத்தெட்டாம் ஆண்டு தைத்திங்கள் இருபத்தைந்தாம் நாள் பிறந்தவர் தான் ஜெறோ செல்வநாயகம் அவர்கள்.

''தந்தையொடு கல்விபோம் தாயொடு அறுசுவை உண்டிபோம்'' என்ற ஆன்றோர் அமுத மொழிக்கமைய தந்தை தாயார் தம் மகனைப் பாராட்டிச் சீராட்டித் துள்ளி திரியும் பருவத்திலே பள்ளிக்கு அனுப்பி இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதை உணர்ந்து கற்பித்து நின்றனர்.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கமைய ஜெறோ செல்வநாயகம் அவர்களும் தன் கல்விப்பயிரை மட்டுமன்றித் தன் திறன்களையும் முளையிலே வெளிக் காட்டி நின்றார். பல்கலைக்கழகம் சென்று பல கலையும் கற்று நிமிர்ந்து ஒரு குருவாய் ஆசிரியராய், அதிபராய் உயர்ந்து யாழ் மண்ணில் தனது கல்வி, சமய, சமூகப்பணி களின் அளப்பரிய சேவையால் எல்லோருக் கும் ஓர் உதாரண மனிதராக விளங்கி நிற்கின்றார் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

ஒரு தேசத்தின் நாட்டின், தலைவன் தன் பணியில் உயர்வும் சிறப்பும் வேண்டுமாயின் "தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம் மூன்றும் நீங்கா நிலன் ஆள்பவர்க்கு" என்ற வள்ளுவர் வாக்கை மனங் கொள்ள வேண்டும். எமது கல்லூரி அதிபரும் குருவுமாகிய ஜெறோ செல்வாநாயகம் அவர்களும் வள்ளுவர் கூறிய குறளுக்கமைய காலந் தாழ்த்தாத தன்மை, கல்வி உடைமை, துணிவு உடைமை ஆகிய மூன்றிலும் கண்ணாய் நின்று கால நீரோட்டம் அறிந்து தான் பெற்ற பட்டறிவுகளை வெறுமனே போதனைகளாக மட்டும் கூறி நிற்காது, அவ் அனுபவங்களைத் தன் கல்லூரிச் சேவை யிலும் குருத்துவப் பணியிலும் சாதனை களாக நிலைநாட்டி நிற்பதால் ''வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்'' என்ற வள்ளுவர் வாக்கை மெய்ப்பித்து நிற்கின்றார்.

ஒருவர் அறப்படித்தால் என்ன ஆள் அணி கொண்டு உலகையே ஒரு குடைக்குக் கீழ் ஆண்டாலென்ன நாடென்பது நாடா வளத்தது என்பதாய் செல்வத்தை உடைய தாக இருந்தால் என்ன, மானிடம் போற்றும் மானிடம் தேடும் மனிதம் என்ற மனித நேயம் மனத்திலும் முகத்திலும் செயலிலும் மலரவில்லையானால் அரிய மானிடப்பிறப்பு எடுத்ததன் பயன்தான் என்னே என்றாகிவிடும்.

எமது கல்லூரி அதிபர் ஜெறோ செல்வநாயகம் அவர்களிடம் மானிடம் போற்றும் மனித நேயம் மலிந்து காணப் படுவதே இன்றைய அவரது உயர்வுக்கும் கீர்த்திக்கும் காரணங்களாகும். இவையாவும் ஒருவர் தான் கற்பதனாலோ அல்லது பயிற்சி செய்து முயற்சிப்பதாலோ மட்டும் அமைந்து விடாது ஆன்றோர் கூறியது போன்று கருவிலே திருவுடையவராகவும் ஆக வேண்டும்.

ஜெறோ செல்வநாயகம் அவர்களும் அவர் தம் தந்தை தாயார் கருவிலும்

## எம் அதிபரின் முயற்சியால் எழுப்பப்பட்ட
## புனித பத்திரிசியார் திருச்சிலை




வளர்ப்பிலும் இறை அருளின் ஆசியிலும் இனிய ஆசீர்வாதம் பெற்றதன் பயனே இன்றைய அவரது திறனுக்கும் சிறப்பிற்கும் காரணமாகும். எமது கல்லூரிச் சமூகத்திற்கு இத்தகைய ஓர் உத்தமமான அதிபரையும் யாழ் மக்களுக்கு என் கடன் பணி செய்வதே என்பதற்கமைய நல்ல திருமறை யாற்றும் ஓர் குருவானவரையும் தந்தமைக்காக இறைவனுக்கு என்றும் நாம் நன்றியுடையவர் களாக இருக்க வேண்டும்.

இன்றைய விழாவின் ஜெறோ செல்வநாயகம் அவர்களது குருத்துவப் பணியின் வெள்ளி விழா நிறைவையும் அவரது அதிபர் சேவையையும் பாராட்டுவ தோடு என்றும் அவரது சேவையும் பணியும் தொடர நல்ல உடல்ஆரோக்கியமும் மனப லமும் இறைவனின் ஆசிகளும் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவ னைவேண்டி, துதித்துக் கல்லூரியின் சார்பில் மனதார வாழ்த்தி நிற்கின்றேன்.

**யுஸ்ரின் அன்ரனிப்பிள்ளை**
**ஆசிரியை**

# ஆயிரத்தில் ஒருவன்

உள்ளத்தில் நல்லுணர்ச்சி ஏற்பட்ட துறவி
ஆயிரத்தில் ஒருவனே அது நீதான்
எந்நாளும் என்பணிதான் என்று
25 ஆண்டுகளை
எமக்காக கழித்த கலைக்களஞ்சியமே
யூபிலி நாயகனே நீ வாழ்க!
பளிங்குக் கற்களினின்று மனிதத்தின்
இதயங்களிலேயே உன்பெயருண்டு!
சமய சமுதாய தொண்டராக மலர நீ
ஊறங்காமல் பாடுபடுகின்றாய்
இறைவனை அடைய
பலபாதைகள் உண்டு அதிலொன்றுதான்
உன்பணி வாழ்வு
மாசற்ற மனமே ஒழுக்கத்தின் பீடம்
ஒருவரை ஒருவர் உயர்த்துவதே வாழ்வு



அதுதான் நீ மற்றவரை
உயர்த்தினாயோ?
இப்போது அவர்கள் உன்னை
உயர்த்துகிறார்கள்.
இந்த கணத்தில் உன்பணிவாழ்வை
பார்க்கும்போது
இளமை உன்னில் துள்ளிக்குதிக்கிறது.
மண், பெண், பொன் எனக்கு
பாம்புப் புற்று
இறைவன் திருவடிகளே எனக்குப்
பற்று என்று
25 ஆண்டுகளைக் கழித்து
யூபிலியை இறைவனுக்கு
சமர்ப்பணமாக்குகின்றாயே
நீ வாழ்க!
வாழ்வின் வெற்றி இரகசியம்
பிறருக்காக தன்னை இழந்து
இன்பம் காண்பதே!
இப்போது நீ வெற்றிபெற்று
இன்பம் காண்கிறாயே!
யூபிலி நாயகனே நீ வாழ்க!

**தோ. அன்ரனி சுரேஸ்**
**தரம் 10 D**

# "தோன்றிற் புகழுடன் தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று"

கடவுள் பெருக்கலாகிய கரம் பொன்னிலே கடைந்தெடுத்த பொன்னேதான், புனித பத்திரிசியார் கல்லூரியின் மணி மகுடமாக விளங்கும் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளார். குருத்துவ வாழ்விலே இருபத்தைந்து ஆண்டுகள் இனிதே நிறைவு செய்த அதிபர் தந்தையை வாயார வாழ்த்துகின்றோம். பாமாலை சூட்டுகின்றோம்.

துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்திலே, எங்கோ ஓர் வெளிச்சம், அதுதான் தந்தை அவர்களின் எதிர்கால ஒளி. குறைகளைக் களைத்தெறிந்து, களம்புகுந்து கடவுளின் பணியை 25 ஆண்டுகள் கச்சிதமாக நிறைவு செய்த நன்நாள் இந்நாளே.

நீதியின்மேல் வேட்கைகொள்வோர் பேறுபெற்றோர் என்பதை தமது அர்ப்பண வாழ்வில் வாழ்ந்து காட்டியவர் எம் குரவர் என்றால் அது மிகையாகாது. காலம் கரைந்தாலும், கடமையில் கண்ணாய், கருத்தாய், கனிதரும் விருட்சமாய், சத்தியத்தின் வித்தகனாய் ஒட்டுமொத்தமாகக் கூறினால் சகல கலாவல்லவனாய், அவர் நடந்து வந்த பாதையின் நிறைவைக் கண்டு நாம் இறும்பூதடைகின்றோம்.

இவ்வுத்தம சீலனைப் பெற்றெடுத்து, திருச்சபையென்னும் பூங்காவில் பூத்துக் குலுங்கும் மலராக அர்ப்பணித்துள்ள இவரது பெற்றோரை இவ்வேளையில் நினைவு கூருகின்றோம். மேலும், திருக்குடும்ப கன்னியர் சபையில இறைபணிபுரிய தம் சகோதரியை மனமுவந்தளித்த பெருமையும் இவர் குடும்பத்தைச் சார்ந்ததே.

புனித பத்திரிசிய குடும்பத்தின் கலங்கரை விளக்கே! உம் கைத்திறமை மாணவச் செல்வங்களின் எதிர்காலத்தை வளமாக்கும் என நம்புகின்றோம். கல்வித்துறை, விளையாட்டுத்துறை, இவை தவிர்ந்த இதர செயற்பாடுகளில் ஊக்கமும் ஆக்கமும் கொண்டு பலர் வியக்கவைக்கும்வண்ணம், பெரும் புகழும் மிளிரச் செய்துள்ளீர்கள்.

அநீதிகள், சலசலப்புகள் தோன்றுமிடத்து, தீயாக நின்று அதனை சுட்டெரிக்கும் உங்கள் நடுபுநிலைமையை எப்படிக் கூறலாம்? "நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமேயென" நீதிக்காகக் குரல் கொடுக்கும் சீர்மை மிகு பண்பாளனே! உம் சிறப்புத் தான் என்னே!

"அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது" அதினிலும் ஆற்றல், அறிவுத்திறன் அனைத்தையும் உள்ளடக்கிய ஆழ்கடல் முத்தே! இசைக்குயிலே! நகைச்சுவை நாயகனே! நற்செய்தியின் தூதுவனே! எத்திக்கும் புகழ் பரப்பும் போதகனே! சற்குருவே! நீர் வாழ்க!

"வழியோரமா, நான் கற்பாறையா, முட்புதரா, நான் நல்ல நிலமா" என்ற வினாவுக்கு நல்நிலத்தின் விதையேதான் என விடை பகரும் இருபத்தைந்தாவது ஆண்டினை நிறைவு செய்யும் நாயகனே சில வரிகளில் உம் கதை கூறுகின்றேன்.

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வித்தானே!<br>
கண்டிப்பும் கருணையும் கலந்த திருவுருவே!<br>
ஆற்றலும் திறமையும் கொண்ட அணிகலனே!<br>
மாமறையின் பொன்விளக்கே!<br>
ஏற்றமுறு பாதைகாட்டும் நல்லாயனே!<br>
ஒழுங்குடன் ஒழுக்கமும்<br>
சீரிய சிந்தையும் கொண்ட சீராளனே!<br>
வாழ்த்தி வணங்குகின்றோம் வெள்ளி விழா<br>
நிறைவினிலே!

அடுத்தொரு பொன்விழா அதுவும் ஓர் எதிர் நோக்கு, அவனியிலே நாம்காண ஆண்டவன் அருள் செய்வார்.

வாழ்க வாழ்க தந்தையே!<br>
நீழ்க நீழ்க உம் ஆயுளே!

செல்வி தி. குருசுமுத்து<br>
ஆசிரியை

# Remembering You With Sweet Memories...

First of all I wish to invoke God's Blessings and extend my Prayerful Wishes on the occasion of Fr. Jero Selvanayagam's Sacerdotal Silver Jubilee.

My Heartiest Congratulations to Fr. Jero on his Silver Jubilee!

**I can still remember the Days**


*We worked together
* We discussed together
*We Planned together

To Uplift the Education of the students at St. Patrick's.
Writing more on a personal note, I am deeply touched by his sense of duty and hard work.
In the midst of difficulties and challenges during the last twenty years Rev. Fr Jero was able to guide his students by his dedicated service.

He has gained a lot of experiences in all field apart from his school duties, he had to handle critical situations. His ability proves his diplomacy. He always takes mutualy decision which are acceptable by all.
While congratulating Fr. Jero I wish him God's choicest Blessings good health, long life and strength to serve for many more years in the Lord's Vineyard.

**Fr. Jeevanathas**
**Principal**
**St. Joseph's College, Trincomalee**

# எமது பள்ளி



இறைவன் கொடுத்து
வைத்த கொடையா?
மனதில் உள்ள
சோகத்தை
மறந்து தினமும்
மகிழ்ந்திருக்க
இளமை ஊஞ்சல் ஆடிவிளையட
எம் இதயத்தருகில் இருப்பது
எம் பள்ளியல்லவா!
அது
எமக்கு கோயிலல்லவா!

சேர்ந்து நாடகங்கள்
கற்றிடவே
அமைத்து வைத்த
கோயிலா?
கோடிநன்மை
பெற்றிடவே

**அ. சஜீவன்**
**தரம் 7D**

# ஆலயங்கள் தேவையில்லை.....



ஆலயங்கள் தேவையில்லை ஆகமங்கள் தேவையில்லை
ஆசான் அன்பு போதும் மாணவர் சஞ்சலம் தேவையில்லை
ஆசான் இன்றி மாணவர் இல்லை ஆசான் இன்றி கல்வியுமில்லை
ஆசான் அன்பு கடனைத்திருப்பித் தந்தவர் யாருமில்லை
(ஆலயங்கள்)

படிக்கும் வேளையில் பிள்ளை மயங்கினால் துள்ளி எழுந்த நம் ஆசான்
ஆவிபதறித்தான் அழுது புலம்பினேன் இருக்கின்றாள் சும்மா
என்ன பாடமென்றாலும் பணிவாகக் கற்றுத் தந்தார்
கற்கும் பாடம் எல்லாமே மிகத்தெளிவாகக் கற்றுத் தந்தார்
தலையாட்டும் விதியின் கையில் விளையாட்டுப் பிள்ளைகளானோம்
கல்வி எனும் அறிவிலே வாழும் மாணவர் நாமானோம்
(ஆலயங்கள்)


வெள்ளி நிலவுதான் தொலைவில் இருப்பினும் வெளிச்சம் பூமியில் வீசும்
உலக உறவுதான் அறுந்த போதிலும் தொடரும் நம் கல்வி
ஆவியான தண்ணீர மீண்டும் மழையாய் பூமியைத் தீண்டும்
சோர்ந்த நேரம் மாணவர் கனவில் துணையாய்க் கல்வியே தோன்றும்
கல்வியில் நிலைத்து வந்தோம் கல்வியே நிலையாய் மாற
அறிவினைத் தேடும் அன்பின் வடிவில் மாணவர் நாமாவோம்
(ஆலயங்கள்


**ப. மில்ரன்**
**தரம் 6C**

# அன்று - நேற்று - இன்று...














# A man of Foresight and Action

It gives me great pleasure to foreword this message of felicitations on the occasion of the Silver Jubilee of Rev. Fr. Jero Selvanayagam, Rector of St. Patrick's College, Jaffna. Many are the Rectors who have contributed immensely to keep the name and fame of the college. Some of the contributions are visible to our naked eye. Where as some are not. Rev. Fr. Jero Selvanayagam's contributions belong to the second category.

He is very good at discovering inherent talents in students. He saw that the talent of the students never went waste. He gives every opportunity to encourage the students to develop their hidden talents. It is due to this that our school excels in the spheres of educations, athletics, drama, speech and other activities.

He made special provision to the students to take part in the sports activities such as Athletics, Badminton, Basketball, Volleyball, Kabadi, Carom and other games. Those who participate in the various game know the great interest he takes in these to help them to win at the inter school competitions.

He makes the best use of all the resources in the school and there by the students are able to widen their knowledge and build up confidence and readiness to face all the competitive examinations. He has contacts overseas, who give his generous contributions, not only to run the school but also to provide facilities for the needy students affected by the recent conflicts.

He has great concern for every one of the students. He virtually knows the names, family backgrounds and performances of each and every student which clearly indicates the keen interest he has in the welfare of the students who he loves very much.

His most challenging task is to lead the college without antagonizing anybody or indulging in any activities that would mar the name of our college. Rev. Fr. Rector is a man of action and his busy schedule keeps him on the move for a responsible part of the day.

The relationship he has with the school is emotionally a close one. He does not think of himself and the college as separate identities. The success of the college and its glory are the passion with him under his able guidance the functions of the college have multiplied to a great extent to provide ample opportunities to the students to bloom into responsible citizens. All functions where meticulously organized and they provide the window to the public to watch and access the efficiency of the college.

We do appreciate his services to a very great extent and wish him many more years of fruitful service to the down trodden and the underprivileged.

**Mr. S. Patick Balarajah**
**Teacher**

# கவி நாயகன் அல்ல

# காவிய நாயகனே!

செம்மொழியாம் எம்மொழியின்
செந்தமிழ் நிகண்டெடுத்து
பைந்தமிழில் உமக்கோர்
கவி படைக்க
கச்சிதமாய் திரட்டினேன் பக்கங்களை
காணவில்லை உம்மை
புகழ்ந்தேற்றவொரு வார்த்தைதனை
சின்னவன் நான் சிறுபிள்ளைத்தனமாய்
சிந்தித்து விட்டேனோ
உம் புகழ் சொன்னால் கவியாகாது
அது மற்றுமோர் காவியமாய் மாறிப்போகும்

அன்பான ஆசானாய்
பண்பான நண்பனாய்
பாசமான தகப்பனாய்
பத்திரிசியத்தின் தலைவனாய்
எத்தனை அவதாரம் எடுத்தீர்
அத்தனையும் சொன்னால்
அது காவியம்தானே.

கற்பித்தலில் கண்ணியமாய்
கண்டிப்பதில் சிம்மசொற்பனமாய்
கருத்தூன்றிப் பேசுவதில்
கைதேர்ந்த வல்லவனாய்
கல்லுக்குள்ளும் எத்தனை ஈரம்
அத்தனையும் சொன்னால்
அது காவியம்தானே
நல்லொழுக்கம் என்னும்
நற்கொடை நல்கினீர்
நற்றமிழ் பயிலும்,
நல் வாய்ப்பருளினீர்
பாசத்தை அருளினீர் - தெய்வ
பக்தியை வளர்த்திட்டீர்
இத்தனையும் சொன்னால்
இது காவியம்தானே!


துடுப்பெடுத்து ஆடிய போதும்
உதைத்துப் பந்தாடிய போதும்
கரத்தால் ஆடிய போதும்
கண்டோம் உம் வீரமதை
பத்திரிசியம் பெயர் கேட்டால்
பயந்தோட வைத்தீர் எதிரணியை
இத்தனையும் சொன்னால்
இது காவியம் தானே!

ஆமை போல் உம் வேகம் என்பர்
ஆயிரம் அர்த்தம் அதனுலுண்டென
அறியாதோர்
ஆய கலைகளில் ஆசை கொண்டீர் -
எம்மையும்
ஆர்வமுடனே பயிலவும் வைத்தீர்
ஆண்டவன் பாதம்
ஆற்றுப் படுத்தினீர்
அத்தனையும் சொன்னால்
அது காவியம் தானே!
உம் பணி சொல்வதென்றால்
அது உலகில் இமயமலை
உம் அன்பு சொல்வதென்றால்
அது உலவும் தாஜ்மஹால்

உம் பக்தி சொல்வதென்றால்
அது உலகில் சீனப்பெருஞ்சுவர்
உம் வாழ்வை சொல்வதென்றால்
அது உலகில் மற்றுமோர் அதிசயம்
வாழ்க நீர் என்றும்
வளர்க உம் பணி எங்கும்.

**றோ.பெ.றொஷான்**
**பழைய மாணவன்**
**யாழ். பல்கலைக்கழகம்**
**2008/2009.**

# மலர்ந்தது பணி இனிய பொழுதாய்



## குரு

சுழலும் இப் பூமியில் நடக்கப்போகும் அதிசயங்களை மனிதப்புலன்களுக்குப் புரியாத படி செய்திருப்பவர் எல்லாம் வல்ல இறைவனே! அந்தப் பரம்பொருளின் அதிசயச் செயல்களை புரிந்தும் புரியாதவர்கள் போல் இன்பலயத்தில் மயங்கி வாழ்வதும் துன்பத்தில் துவண்டு துடிப்பவர்களும் மனிதராகிய நாமே!

நிக்கொலாப்பிள்ளை மனுவேல்பிள்ளை -இராஜேந்திரம் ஜேட்றூட் இராசம்மா தம்பதிக ளுக்கு ஊர்காவற்துறை கரம்பனில் 1958ம் ஆண்டு தை 25ந் திகதி பிறந்த முத்து, அந்த மண்ணின் சொத்து, வித்தாகி 25வது குருத்துவ நிறைவைக் காணுகின்றளவுக்கு விருட்சமாகு மென இறைவன் அருளிய அதிசய திட்டத்தை அப்பெற்றோர்கள் அன்று அறிந்திருக்க மாட்டார்கள். ஆனால் அந்த மகனுக்கு இன்று வெள்ளி விழா. மலர் மலர்கின்றது.

## பாறை

'கண்டு விசுவாசிக்கிறவனை விட காணாமல் விசுவசிக்கிறவன் பாக்கியவான்' என மொழிந்த யேசுவின் வார்த்தைக்கு குருத்துவ வாழ்வில் நுழைகின்ற குருக்கள் மேலானவர்கள். அந்த சீடத்துவ வரிசையில் இணைந்து விசுவாசத்தில் வாழும் அருட்பணி. ஜெறோ செல்வநாயகம் அடிகளாருக்கு இன்று வெள்ளி விழா கொண்டாடுவது சாலப் பொருத்தமாகும். இவருடைய ஆன்மீகப் பணி வாழ்வில் தொடர்ந்தும் இன்னும் பல பரிமாணங்களைக் கடந்தும் 'பொன்விழாவும்' காணவேண்டும் என்ற அவாவை ஈடுசெய்து வாழ இறை ஆசீரோடு பாராட்டி வாழ்த்துகிறேன்.

## குருத்துவம்

குருத்துவம் இறைவனின் கொடை. யாருமே எளிதில் அர்ப்பணிப்பு பெற முடியா தளவுக்கு பரிசுத்த ஆவியானவரின் தேவ தூய அழைத்தல். குருக்களானாலும் அவர்களும் மனிதர்கள் தான் என குறுகிய அறிவு சார்ந்தோர் கூறிவிட முடியாதளவுக்கு மனித வாழ்வுக்கு அப்பாற்பட்டது. ஓர் தெய்வீகப் பணி, தன்னலம் கருதாத பொது நலவாழ்வு நேரிய சிந்தனையை நிலை நிறுத்தி நீதிக்காக போராடவும் உயிரை துறக்குமளவிற்கு உண்மை நிறைந்த உன்னதமான பணி. அது பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசுவது போல மணம் கமழவேண்டும். உலகமறியவேண்டும். உன்னை ஈன்ற பெற்றோர்கள் உள்ளங்கள் குளிர வேண்டும். அங்கே தான் குருத்துவ மலர் பூக்கும். குருக்களுக்கும் குறைகள் உண்டு. நிறைகள் உண்டு. ஆன்மீகப்பணி வாழ்வில் அமைதியும் நிகழலாம். புயலுமடிக் கலாம். பூகம்பமும் எழலாம். சுனாமியும் வரலாம். நிஷாவும் நிலைகலங்க வைக்கலாம். இத்தனை இடர்களையும் தாண்டியும் அமைதிச் சுடர் வீசுகின்றது என்றால் அங்கே குருத் துவம் வாழ்கின்றது. அதனால் தான் இன்று எம் தந்தைக்கு வெள்ளி விழா கோலம் காணுகின்றோம்.

## குருவாக

1958ம் ஆண்டு தொடங்கிய அடிகளா ரின் வாழ்வு பற்பல பதிவுகளின் பின்பு 1985ம் ஆண்டு 8ம் மாதம் 6ம் திகதி குருத்துவ அழைத்தல் கிடைத்தது. யாழ். ஆசனக் கோயில் உதவி பங்கு தந்தையாக பணியாற் றினார். உப பங்குகளுக்கு அவரே பொறுப் பாகவும் இருந்து வழி நடத்தினார். அப்போது உதவிப் பங்கின் பீடப்பணியாளர் பாடகர் குழாமிற்கு நான் காப்பாளராக இருந்து வழிநடத்திய காலகட்டத்தில் இக் கல்லூரிக்கு

காலடி எடுத்து வைக்கு முன்பே அடிகளாரோடு பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. மனம் நிறைந்த சிரிப்பு. பகிடிக்கதைகள் கூறுவார். அவருடைய அணுகுமுறை வித்தியாசமானதாகவும் மற்றவர் மீது இரக்க சுபாவமுடையவராகவுமிருந்ததை நான் நன்கு அறிவேன். குறுகிய காலப்பகுதியில் உடுப்பிட்டி பங்கிற்கு மாற்றலாகி சென்றுவிட்டார்.

## கல்விக் களம்

முன்னாள் கல்லூரி அதிபர் அருட்பணி. ஜி.ஏ.பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு அதிபராகவிருந்த நேரத்தில் 1989 ஆண்டு 10ம் மாதம் 01ம் திகதி அன்று தான் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகள் ஆசிரியராக எமது கல்லூரியில் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். பங்குப் பணித்தளங்களிலிருந்து சற்று விலகி மாணவர்களை வழி நடத்தும் வித்தியாசமான பணி. 'கல்வி' சார்ந்த விடயத்தில் அவருடைய செயற்பாடுகள் சுறுசுறுப்பும் விநோதமானதும். விவேகத்தோடு வேகமாக செயற்படுவார். 1998ம் ஆண்டு 04ம் மாதம் 27ம் திகதி அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளார் உப அதிபராக நியமனம் பெற்றார். 2008ம் ஆண்டு தை மாதம் 2ம் திகதி அன்று தான் இக் கல்லூரிக்கே அதிபராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். மறக்க முடியாத பல பதிவுகள் மாணவனாக, அருட சகோதரனாக, ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக, அதிபராக வளர்ச்சிகளைக் கண்டு வெற்றி கண்டுள்ளார்.

## குணாதிசயம்

வெள்ளிவிழா நாயகன் ஆடம்பரத்தை விரும்பாதவர். பெயரையும் புகழையும் விரும்ப மாட்டார். பிறருக்கு மாலை சூட்ட விரும்புவர். வீண் செலவினங்களை விரும்புவதில்லை. கல்லூரிக்காகவும் அரும்தந்தையர்கள், ஆசிரியர்களின் வற்புறுத்தலுக்காகவும் சில விடயங்களை அரை குறை மனதோடு ஏற்றுக் கொள்வார். எவரையும் எளிதில் புரிந்து அறிந்து கொள்வார். ஆனால் எதுவுமே தெரியாதவர் போல் நடந்து கொள்வார். எதையும் உடனே செய்ய வேண்டும் என்று நினைப்பவர். ஆசிரியர் தொடக்கம் அடுப்படி வரையுள்ள ஒவ்வொருவரையும் நன்கு அறிந்து புரிந்து தெரிந்து கல்லூரியின் சந்து பொந்தெல்லாம் திரிந்து கல்லூரி வளர்ச்சிக் காகவும் தனது ஆளுமை வளர்ச்சிக்காகவும் உரம் சேர்ப்பவர்.

அடிகளார் அதிபர் என்பதை மறந்து பணிபுரியும் குருவானவர் போல் செயலாற்றும் விவேகமும் வேகமும் கொண்டவர். இக் கல்லூரிக்காக அன்று தொட்டு இன்று வரை தனது உடல் பொருள் ஆவியனைத்தையும் அர்ப்பணித்து எந்தவொரு வேலையும் துரித கதியில் செய்து முடிக்க வேண்டும் என்ற அவர் கொண்டவர்.

எவரிடமாவது ஒரு வேலையை ஒப்படைத்தால் கொடுக்கப்பட்ட வேலையை கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் செய்து முடிக்க வேண்டும் என்று தந்துவிட்டு ஆசனத்தில் இவர் அமர்ந்திருப்பவர் அல்லர். அதனை செய்து முடிக்கும்வரை அந்த நபருக்கு முன்னாலும் பின்னாலும் சென்று பம்பரம்போல சுழன்று காரியத்தைக் கச்சிதமாக செய்துமுடிக்கும் வரை ஓயமாட்டார்.

## எதிர்பார்ப்பு

'யார் பெரியவன்' என்ற நற்செய்தியின் படி 'ஒருவன் முதல்வனாய் இருக்க விரும் பினால் அவன் அனைவரிலும் கடையனாய் இருக்கட்டும் அனைவருக்கும் பணியாளன் ஆகட்டும்' என்ற வார்த்தைக்கமைய துறவறத் தின் தூய்மையை உணர்ந்து தம்மை முழுமையாக வழிபடுத்தி நெறிப்படுத்தி வாழ்பவர். எவரையும் எளிதில் புரிந்து அறிந்து, அவர்களின் பிரச்சினைக்கு உடனடி நிவாரணம் கொடுக்க விரும்புவார். அதற்காக 'ஓடு மீன் ஓடி உறுமீன் வருமட்டும் காத்திருக்குமாம் கொக்கு' என்பது போல் சந்தர்ப்பமும் தருணம் பார்த்து செயலாற்றக் காத்திருப்பவர்.

இக் கல்லூரியில் ஆசிரியராக 9 வருடங்களும் உப அதிபராக 10 வருடங்களும், அதிபர் பணியில் 2 1/2 வருடங்களும் தான் ஆகியிருக்கின்றது. கடக்கப்போகும் வருடங்களில் அதிபர் அவர்களின் சேவையினால் எமது கல்லூரி மென் மேலும் வளர்ச்சி காணும் எனவும் ஆசிரியர்கள் ஊழியர்களின் உள்ளங்கள் உயர்வடையும் எனவும் மாணவர்களின் கல்வி, கலை, விளையாட்டு மென்மேலும் வலுப்பெறும் எனவும் அதனால் அதிபரின் சேவை சிறக்கும் எனவும் அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு உண்டு.

வெள்ளியில் கொண்டாடப்படும் வெள்ளி விழா நாயகனின் வெற்றி யால்...புதுமை உலகம் மலரும் இன்ப பொழுதாய் யாருக்கும் விடியும்.....?என்ற எதிர்பார்ப்போடு அடிகளின் பணி வாழ்வு இன்று போல் என்றும் பல்லாண்டு காலம் சிறக்க இறைவன் ஆசீர் கிடைக்க பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**திரு. S. B. பீற்றர் போல்**
**புனித பத்திரிசியார் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

# எங்கும் இருப்பாய்

பத்திரிசிய கன்னித்தாய் பெற்றெடுத்த முத்தே
பரமன் பணிதொடர்ந்து வெள்ளிவிழா காண்பவரே
பள்ளிக் கலாச்சாரம் கல்வியுடன் கண்ணியமும்
பாரினிலே உயர்தோங்க பணியது புரிபவரே

கல்லூரி விழாக்களிலே கானமாய் நீ இருப்பாய்
கனத்த வெயிலிலே அணிநடை பயிற்றுவிப்பாய்
கலைஞனாய் நீ இருந்து கலைநிகழ்வை நெறிசெய்வாய்
கரைந்திட்டாய் பள்ளிதனில் உறைந்திருப்பாய் எம்மனதில்

மாணவர் எம் ஆளுமையில் மறைகரமாய் நீ இருப்பாய்
மாறுதலை நீ விரும்பி மாற்றங்கள் பலபுரிவாய்
மாலையிலே வேஷமிட்டு தோட்டமது பண் செய்வாய்
மார் தட்டி – பத்திரிசியன் நான் என்று கர்வம் கொள்வாய்

வாழ்வெல்லாம் சமர்ப்பித்தாய் எம்பள்ளி தாயவள்க்காய்
வாழும் நாட்களெல்லாம் எம்உயர்வில் நீ இருப்பாய்
வானம் உள்ளவரை வானில்நிலா உலாவும் வரை
வாழ்ந்திடும் எம் குடும்பம் எங்கும் நீ இருப்பாய்.


**எ. ஜெனாத்**
**12C (2012)**

# கடவுள் அருள்வார் கைம்மாறு

சேவைசெய்யும் மனமே
அன்னை மடியினிலே அமுதுண்டு
அன்புக் கல்வியினைப் பள்ளிதனில் பெற்று
இன்பக் கழகத்தில் தலைநிமிர்ந்தாய்.
அன்றே தொடங்கிய உம்சேவை
ஆண்டவன் பார்வையில் அற்புதமானது!

உலகில் சேவைபுரியவென - உன்போல்
இன்னொரு பிறவியும் வேண்டிநிற்போம்
காலம் மாறும்போது
கடவுள் அருள்வார் மைம்மாறு!

மக்கள் மகிழ்ச்சி பெற்றிடவே - மனம்
நிறைசேவையாற்றும் உம்மை
குருத்துவவாழ்வின் வெள்ளிவிழாவில்
மனம் நிறைய வாழ்த்துகிறோம்!



ஜெனீலதாஸ்


8 B

"நற்கனி கொடுக்கும் மரங்களைப் போன்று
நற்பணி புரியும் நபர்களே நமக்கு வேண்டும்"

# Our Rector's Commitment at the Significant Days of our College




ST.PATRICK'S DAY




ANNUAL SPORTS MEET



ANNUAL PRIZE DAY




ENGLISH DAY

25

# அருட்பணி. ஜெறோ செல்வநாயகம் அடிகளின் வாழ்க்கைச் சுவடுகள் சில...

| | | |
|---|---|---|
| பெயர் | :- | ஜெறோ செல்வநாயகம் |
| தந்தை பெயர் | :- | நீக்கிலாப்பிள்ளை மனுவற்பிள்ளை |
| தாய் பெயர் | :- | இராஜேந்திரம் ஜேட்றூட் இராசம்மா |
| பிறந்த இடம் | :- | கரம்பொன் |
| பிறந்த திகதி | :- | 25.01.1958 |
| பங்கு | :- | கரம்பொன், புனித செபஸ்தியார் ஆலயம் |
| ஆரம்பக் கல்வி | :- | புனித செபஸ்தியார் ஆரம்பப் பாடசாலை, கரம்பொன் |
| இடைநிலைக் கல்வி | :- | புனித அந்தோனியார் கல்லூரி, காவலூர்<br>புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் |
| குருத்துவப் பயிற்சி | :- | தேசிய குருத்துவக் கல்லூரி, அம்பிட்டிய, கண்டி<br>புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை<br>குருத்துவத் திருநிலைப்படுத்தல் 06.08.1985 |
| உயர் கல்வி | :- | கலைப்பட்டதாரி (யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 1981)<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா (தேசிய கல்வி நிறுவகம் 1994)<br>கல்வி முதுமாணி (லண்டன் பல்கலைக்கழகம் 1997) |
| பங்குப்பணி | :- | 1985 உதவிப் பங்குக்குரு, யாழ். பேராலயம்<br>1986 பங்குக்குரு, கிளிநொச்சி, வட்டக்கச்சி<br>1987 பங்குக்குரு, கரவெட்டி |
| கல்விப்பணி | :- | 1989 புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர், விடுதிக்காப்பாளர்<br>1992 பகுதித் தலைவர் - கனிஸ்ட இடைநிலைப்பிரிவு<br>1994 பகுதித் தலைவர் சிரேஸ்ட இடைநிலைப்பிரிவு<br>1998 உபஅதிபர்<br>2008 கல்லூரி அதிபர் |

# Acknowledgement

**The Silver Jubilee Celebration Committee** gratefully thank and appreciate all those who sent messages of felicitation for the Souvenir published on the occasions of our Rector's Sacerdotal Silver Jubilee.

First and foremost we wish to thank our Most Holy Father Pope Benedict xvi for his blessing sent for the occasion.

We gratefully remember all our beloved Bishops who have sent messages of felicitation to grace the occasion of the Sacerdotal Silver Jubilee of our Rector.

We thank the Bishop Emeritus of Trincomalee – Batticaloa , Rt. Revd. Dr. Leo Rajendram Antony – Uncle of Fr. Jero for his words of appreciation and the assurance of fervent prayer.

We sincerely thank our Rector Emeritus & the Vicar General for his kind message.

Our deepest thanks go to Nallai Thirugnanasampantha Athenam for the graceful words expressed in the message.

We thank the Government Agent Emeritus, Mr. K. Ganesh for his kind message of felicitation and best wishes.

We express our gratitude to the Provincial, Holy family Sisters for the encouraging words of appreciating the mission of our Rector.

With much thankful heart we remember the Principal, Jaffna College for wishing our Rector God's Grace.

Our thanks go to the Principal of our sister school, for her heartfelt wishes & for her invocation of God's abundant blessings.

We express our thanks to the District Sports Officer for her greetings and words of appreciation. We thank the General Secretary, O.B.A. Jaffna for his contribution in sending Jubilee message for the Souvenir.

We gratefully acknowledge all the Fathers, Sisters, Tutorial Staff, Retired teachers, Students and Old Boys who wrote valuable articles & poems to be published in the Souvenir.

It's our duty to thank Mr. Judesan for the designing of the colourful cover page & the other pages. St. Joseph's Catholic Press certainly deserves our thanks. We sincerely thank them for their patience, generosity and readiness in completing the souvenir in due time.

We thank everyone for their kind collaborations and hardwork.

**The Silver Jubilee Celebration Committee**

*Best Wishes for the Sacerdotal Silver Jubilee of the Rector - St. Patrick's College, Jaffna.*

# S.V.MURUGESU

**Agent for**

Unilever Sri Lanka Ltd., Energizer Lanka Ltd., Forterra Brand Lanka (Private) Ltd., Shell Gas Lanka Ltd., Chevron Lubricants Lanka Ltd.




Shell GAS

No. 154, Hospital Road,
Jaffna.

Tel: 021 222 2911
021 222 2202



குருத்துவ வெள்ளிவிழா நாயகன்
அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம்
(Rector, St. Patrick's College)
அவர்களை மனதார இறையருள் வேண்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்
பதிவாளர், அலுவலகர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள்.

# PATRICIAN INSTITUTE


## பற்றிசியன் தொழிற்பயிற்சி நிறுவனம்

No. 61, Patrick's Road,
Jaffna.

Tel / Fax: 021 222 6148
E - mail: arkjaffna@yahoo.com




# கபிலா காலணியகம்



Bata DSI



# KABILA



## Shoe Palace

Branch :
13, Power House Road,
New Market,
Jaffna.

கிளை :
13, பவர் ஹவுஸ் வீதி,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



# லைடன்
# புடவை நிலையம்



# Leyden Textile Centre



# 410, Hospital Road,
Jaffna.

# 410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# Come every one!

*Let's give a cheer to our father dear*
*On his* **Silver Jubilee** *in Priestly Ministry*

## Congratulations!!!


Rev. Fr. M. Jero Selvanayagam

*May you always drench in spiritual ecstasy!*
*May all your endeavors find success!*
*May your vows be blessed through never ending years!*

***Take care! Good Luck! God Bless!***

*Best Wishes*
*From*
*Commerce Students' Union*

# CONGRATULATIONS



to our Rector

**Rev. Fr. M Jero Selvanayagam**

*on the occasion of his*

## Sacerdotal Silver Jubilee

Greetings From
**Science Union**
St. Patrick's College


With the Best Complements From
Maithely Nagai Madam
No. 89 V, Kasthuriyar Road, Jaffna. Tel: 021 222 7902
Yarl Maithely
JEWELLERS
No. 89 Z, Sea Street, Colombo - 11. Tel: 011 2396239


With the Best Complements From
சிறி மதனா
நகை மாளிகை
தங்கப் பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
இல, 155/M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7772



*I chose you to bear fruit*
*that will remain.*

Judeson Jaffna. 077 7446973